
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



நாரதர் ஒருபால்; தெய்வ நாயகி ஒருபால்; இன்பம்
சேரவே காத்து நிற்கும் தேவர்கள் ஒருபால்; துன்பம்
தீரவே இன்பக் காட்சி திருப்பரங் குன்றில் காட்டும்
வீரனை வணங்கி அந்த வீட்டினை இங்கே காண்போம்

மே 1989

நினைவாஞ்சலி

தோற்றம் :

11—9—1927



மறைவு :

25—4—1979

திருமதி ஆர் எம். மெய்யம்மை ஆச்சி

(முன்னாள் டைரக்டர், ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்)

எண்ணாய் எழுத்தாய் எங்கள் வாழ்வில்
இணைந்த எம்முயிர் அன்னையே - மண்ணில்
உயர்ந்திட மாசறு வழிதரு மெய்யம்மைத் தாயே
தூய உன் மலரடிக்கெம் அஞ்சலி

என்றும் தங்கள் நினைவைப் போற்றும்
மகன் ஆர் எம். அருணாசலம்
மருமகள், மகள்கள். மருமகன்கள். பேரப் பிள்ளைகள்
மற்றும் ஸ்ரீ விசாலம் சிட் பண்ட லிமிடெட்
அலுவலர்கள்

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.
தொலைபேசி: p. p. 26668

குரல் 8
ஒலி 4
சுக்ல
சித்திரை
மே
1989

சீர்தரு நாவுக் கரசரைப் போல்இச் சிறியனுமோர்
கார்தரு மாயைச் சமணுல் மனக்கருங் கல்லில்கட்டிப்
பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே
ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின்றேன் கரை ஏற்றாசே.
—இராமலிங்க வள்ளலார்

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

தலைமை ஆசிரியை அழகம்மை

காரைக்குடி ஓடாப்புலி மெய்யப்ப செட்டியார் வீட்டில் பிறந்தவர் திருமதி அழகம்மை ஆச்சி. B. Sc. (Zoology) யும் M. Ed. ம் படித்துள்ள இவர், இப்போது மானகிரி லெ. அரு. நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

கல்வியில் சிறந்த இவர், தன்னுடைய பள்ளியில் பயிலும் மாணவர்களும் தன்னுடைய குழந்தைகளும் நன்கு கல்வி கற்க வேண்டுமென்றும் நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்றும் பெயரும் புகழும் பெற வேண்டுமென்றும் பெரிதும் விரும்புகிறார்.

'கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவர் வாக்கின்படி வாழ்வதைத் தன் இலட்சியமாகக் கொண்டுள்ளார் இவர்.

நன்கு கல்வி கற்றும் பொருளாதார வசதிக் குறைவால் மானகிரியில் இரண்டாம் தாரமாக வாழ்க்கை பெற்றுள்ள இவர் ஒரு இலட்சியப் பெண்ணாக ஒளி வீசுகிறார்.

அவரது குடும்பம் பற்றியும் அவரது வாழ்க்கை முறை பற்றியும் அவரது எண்ணங்கள் பற்றியும் ஒளிவு மறைவின்றி அவரே கூறுகிறார். படியுங்கள்:-

என்னுடன் பிறந்தவர்கள் பத்துப் பேர். எங்கள் குடும்பம் பெரியது தான். ஆனாலும் அது ஒரு பல்கலைக் கழகம். எங்கள் குடும்பத்தில் நான் இரண்டாவதாகப் பிறந்தேன். இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய என் பெற்றோர் அதன் வளர்ச்சியைக் காணாமல் மறைந்து விட்டார்கள்.


என் கணவருக்கு - முதல் மனைவிக்கு 5 குழந்தைகள். அவர்கள் அனைவருக்கும் என் கணவரும் நானும் சேர்ந்து மணமுடித்து வைத்து விட்டோம். எல்லோரும் நல்ல நிலைமையில் உள்ளனர். எனக்கு இரு குழந்தைகள். ஒரு ஆணும் ஒரு பெண்ணும். இருவரும் ஒன்பதாம் வகுப்புப் படித்து வருகின்றனர் இருவரும் நன்கு படித்து நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்பது எனது ஆசை.

நான் இப்போது தலைமை ஆசிரியையாக இருப்பதற்கு என் பெற்றோரே காரணம். எனது கணவர் தனது அய்யா கட்டிய பள்ளியில் உதவி ஆசிரியையாக என்னை நியமித்தார். இப்போது



அரசு அனுமதி பெற்றுத் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறேன். வருகின்ற ஜூன் மாதம் M. Sc. யில் சேர்ந்து படிக்க உள்ளேன்.

ஓய்ந்திருத்தல் எனக்குப் பிடிக்காத ஒன்று. வீட்டில் வேலைக்கு ஆள் வைத்துக் கொள்வது இல்லை. எங்களுடைய வேலைகளை தாங்களே பார்த்து நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்னுடைய அறிவை வளர்த்துக் கொள்வதிலும் எனது பள்ளி மாணவர்களின் அறிவை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி வருகிறேன்.



சென்னை கமலா தியேட்டர் வளாகத்தில் 14-4-89 அன்று 'கமலா பாஸ்ட் ஃபுட்ஸ்' ரெஸ்டாரெண்டை சேவு அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் புதுக்கணக்கு எழுதித் தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் திரு. வி. என். சிடி. நாகப்பன்.

திருமணம் ஆன என்னுடைய சகோதர சகோதரிகள் நல்ல நிலையில் இருந்து வருகிறார்கள். என்னுடைய சகோதரிகள் மூவருக்கு இனிமேல் தான் திருமணம் நடைபெற வேண்டும். அதற்கு இறைவன் தான் வழிவிட வேண்டும். என்னுடைய சகோதரிகள் அதிகம் படிக்கவில்லை. கைத்தொழில் அவர்களுக்குக் கை வந்த கலை. கண்களால் பார்ப்பதைக் கைகளால் செய்து முடித்து விடுவார்கள்.

— இவ்வாறு அவர் கூறினார்.

திருமதி அழகம்மை ஆச்சியின் கணவர் திரு. லெ. அண்ணாமலை செட்டியார் ஆவார். திருமதி அழகம்மை ஆச்சி 1973ல் கோவிலூரில் நடைபெற்ற நகரத்தார் மாநாட்டில் பங்கு பெற்று வரதட்சணைக் கொடுமை பற்றிப் பேசியிருக்கிறார். ஓவியம் வரைதல், வண்ணம்தீட்டுதல், கோலம் போடுதல், முட்டை ஓடு, தகரம் போன்றவற்றிலிருந்து அறிவியல் ஆய்வுக் கருவிகள் செய்தல் பூச்சிகள், இலைகளைப் பதப்படுத்துதல் மற்றும் கலைத் தொழில் செய்வது இவரது பொழுது போக்கு ஆகும்.

- எல். சுந்தரம்

சென்னை கமலா தியேட்டரில் ரெஸ்டாரெண்ட் திறப்பு விழா

சென்னை, வடபழநி கமலா தியேட்டர் வளாகத்தில் 14-4-89 தமிழ் ஆண்டுப் பிறப்பன்று 'கமலா பாஸ்ட் ஃபுட்ஸ்' ரெஸ்டாரெண்டை தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் புதுக் கணக்கு எழுதித் தொடங்கி வைத்தார்கள். திறப்புவிழாவில் ஏராளமான நகரத்தார்களும் திரைப்பட நடிகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எட்டுக்குடியில் சித்ரா பௌர்ணமி

சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு நாகபட்டினத்திலிருந்து நகரத்தார்கள் மரகத விநாயகரையும் நிலே அங்கி சாத்திய கதிர் வேலாயுதசாமியையும் மகாரதத்தில் வைத்து 20-4-89 அன்று எட்டுக்குடிக்கு எழுந்தருளச் செய்தனர். அன்று எட்டுக்குடி நகர மடத்தில் சுவாமிக்கு அபிஷேக, ஆராதனை மகேஸ்வர பூஜை செய்து அன்னதானம் வழங்கினர். பிற்பகல் மங்கலப் பொருட்கள் ஏலம் விடப் பெற்றன.

நாகபட்டினம், திருவாரூரிலிருந்து வந்த பிரார்த்தனைக் காவடிகளுடன் 21-4-89 அன்று நகர மடத்தில் நகரக் காவடி கட்டி எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமிக்குக் காவடி செலுத்தி அபிஷேகம் செய்தனர். அன்னதானமும் வழங்கினர்.

காரைக்குடி இன்னர்வீல் சங்கக் கூட்டம்

காரைக்குடி இன்னர்வீல் சங்கக் கூட்டம் 25-4-89 அன்று சங்கத் தலைவி டாக்டர் அலைஸ் செல்லப்பா தலைமையில் கம்பன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. சங்க வணக்கப் பாடலை திருமதி மீனாட்சி அருணாசலம் பாடினார். திரைப்படப் பின்னணிப் பாடகி எம். எஸ். ராஜேஸ்வரியை வசந்தாள் சுந்தரம் அறிமுகப்படுத்தினார். எம். எஸ். ராஜேஸ்வரி 'மலரும் நினைவுகள்' என்னும் தலைப்பில் பேசி, சில திரைப்படப் பாடல்களைப் பாடினார். எம். எஸ். ராஜேஸ்வரிக்கு நினைவுப் பரிசை சங்கச் சார்பில் அகல்யா ராகவன் வழங்கினார். செயலாளர் நாச்சம்மை கருப்பஞ் செட்டியின் நன்றி உரைக்குப் பின் தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது.


எனது வெளிநாட்டு அனுபவங்கள்




வி.என்.சிதம்பரம்

—40—

லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்திற்கு என்னை வரவேற்க காரைக்குடி எஸ் ஆர். எம் எஸ். நாராயணன் செட்டியார் அவர்களது மகன் சுப்பு அவர்கள் வந்திருந்தார்கள். நாராயணன் செட்டியார் அவர்களுக்கு மலேசியாவில் ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அவர்கள் என்னுடைய நீண்ட நாளைய நண்பர். அவர்களுடைய மகன் சுப்புவிற்கு கோட்டையூர் க. வீ. அழ. ராம. ராம. நாச்சியப்ப செட்டியார் மகள் நாச்சம்மையைத் திருமணம் செய்து இருக்கிறது. சுப்புவும் குடும்பத்துடன் லாஸ் ஏஞ்சல்ஸில் வசித்து வந்தார். திரு. சுப்பு மிகவும் அன்பாகப் பழகுவார். அதே சமயம் தன்னுடைய தந்தையாரைப் போல மிக அடக்கமாக, எளிமையாக இருப்பார். அவர்கள் இல்லத்தில் நான் நான்கு நாட்கள் தங்கியிருந்தேன். அந்த நான்கு நாட்களும் ஆபீஸ் போய் வந்த நேரம் போக மீதி நேரத்தில் அவர்கள் என்னை அழைத்துக்



அமெரிக்க நாட்டில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள டிஸ்னி லாண்டில் டிஸ்னி பொம்மையுடன் திரு. வீ என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் திரு வி என். சிடி நாகப்பனும்.



டிஸ்னிலாண்டில் உண்மையான யானைகள் போலக் காட்சி தரும் யானை பொம்மைகள்.

கொண்டு ஊரைச் சுற்றிக் காண்பிப்பார்கள் ஆபீஸ் நேரங்களில் வெளியே செல்ல வேண்டுமானால் திருமதி சுப்பு அழைத்துக் கொண்டு செல்வார்கள்.

லாஸ் ஏஞ்சல்ஸில் அவசியம் பார்க்க வேண்டியது டிஸ்னி லேண்ட். வால்ட் டிஸ்னி என்ற இளைஞருடைய முயற்சியினால் 1955ம் ஆண்டு டிஸ்னி லேண்ட் உருவானது. சுமார் 160 ஏக்கர் நிலத்தில் டிஸ்னி லேண்டை அமைத்து இருக்கிறார்கள். லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து டிஸ்னி லேண்ட் இருக்கும் இடம் 30மைல் ஆகும். டிஸ்னி லேண்டை விவரிக்க வார்த்தைகள் போதாது, அவ்வளவு அற்புதமாக அமைத்து இருக்கிறார்கள். கனவு உலகத்தில் சஞ்சரிப்பது போல அது உள்ளது. முழுமையாகப் பார்க்க வேண்டுமானால் மூன்று நாட்கள் சுற்றினால்தான் டிஸ்னி லேண்டைப் பார்க்க முடியும். டிஸ்னிலேண்டுக்குள் - நுழைந்தவுடன் ஒரு பழங்காலத்து கடைத் தெருவை அமைத்து இருக்கிறார்கள். 100 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கக் கடை வீதி எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது அது பழைய காலத்துக் குதிரை வண்டிகள் ஓடுகின்றன. அதில் ஏறிச் சுற்றிப் பார்க்கலாம் பழைய காலத்து இரயில், பஸ், கார் முதலியவைகள் ஓடுகின்றன. அதிலும் ஏறிச் சுற்றிப் பார்க்கலாம். இன்றைய நாகரீகப்படி புல்லட் இரயிலும், மோனோ இரயிலும் இருக்கிறது.

ஒரு இடத்தில் ஆப்ரஹாம் லிங்கன் சிலையைச் செய்து வைத்திருக்கிறார்கள். அவர் எழுந்து கையைக் காட்டிப் பேசுவதுபோல தத்ரூபமாக அதை அமைத்து இருக்கிறார்கள்.

ஒரு இடத்தில் ஒரு காடு அமைத்து இருக்கிறார்கள், அந்தக் காட்டிற்குள் காட்டாறு ஒன்று செல்கிறது. அந்த ஆற்றில் ஒரு சிறு படகில் நம்மை ஏற்றிச் செல்கிறார்கள் படகு போய்க் கொண்டிருக்கும்போது திடீரென்று காண்டாமிருகம், முதலைகள் தோன்றுகின்றன. முதலைகளை ஒட்டி படகு செல்கிறது. படகில் இருக்கும் நம்மை முதலை கடித்துவிடுமோ என்று அலறுகிறோம். உடனே யானைகள், சிங்கங்கள்

புலிகள் முதலியவை கரையில் தோன்றி காலைத் தூக்குகின்றன. பழங்காலத்து மக்கள் வில்லோடும், வேலோடும் மிருகங்களை வேட்டையாடுவது போன்ற காட்சிகளையும் அமைத்து இருக்கிறார்கள். அவை மிகப் பயங்கரமாக இருக்கின்றன. ஓர் இடத்தில் பெரிய பிள்ளையாரை அமைத்து இருக்கிறார்கள். எல்லாம் பொம்மை தான். என்றாலும் தத்ரூபமாக அவை அமைக்கப் பட்டு உள்ளன. நேரிலே காண்பது போல ஒரு உணர்வைப் பெறுகிறோம். சில இடங்களில் காடுகள் தீப்பற்றி எரிகின்றன, அந்த வெளிச்சத்தில் பார்த்தால் பழங்குடி மக்கள் நடனமாடுகிறார்கள். அப்படி அமைத்து கற்காலத்திற்கு நம்மை அழைத்துக் கொண்டு செல்கின்றனர். அடுத்து ஒரு பழங்கால கப்பலில் ஏறினோம். கரையில் கொள்ளையர்கள் குகையில் தங்கியிருக்கிற காட்சியைப் பார்த்தோம். அங்கு அவர்கள் திருடி வந்த வைரங்களும் வைடூரியங்களும் காட்சி அளித்தன. அவ்வளவும் பொம்மையிலேயே செய்து இருக்கிறார்கள்.

அடுத்து பிசாசு மாளிகை, பிசாசுகள் குடியிருக்கின்ற குகைக்குள் இரயிலில் செல்லுகின்றோம், திடீரென்று விளக்குகள் எல்லாம் அணைகின்றன. பிசாசுகள் தோன்றிக் கத்துகின்றன அவற்றோடு சேர்ந்து நாமும் அலறுகிறோம். ஒரு இடத்தில் இரயிலில் நமது பக்கத்திலே ஒரு பிசாசு வந்து அமர்ந்து கொள்கிறது. இதயம் பலவீனமானவர்கள் அந்த அரங்கத்திற்குச் செல்லாமல் இருப்பது நல்லது. அங்கு உணவு விடுதிகள் ஏராளமாக இருக்கின்றன. மூன்று நாட்கள் டிஸ்னி லேண்டைச் சுற்றிப் பார்த்தோம். மூன்று நாட்களும் காலையில் திருமதி சுப்பு என்னைக் காரில் அழைத்துச் சென்று டிஸ்னிலேண்டில் இறக்கி விடுவார்கள். அங்கு எல்லா வகையான உணவுகள் கிடைத்தாலும் கூட அவர்கள் தயிர்சாதம், ஊறுகாய் தயார் செய்து ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு என்னிடம் கொடுத்து விடுவார்கள். எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு மாலை 7 மணிக்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் நிற்கச் சொல்லுவார்கள், அந்த இடத்திற்கு வந்து என்னை அழைத்துச் செல்வார்கள். கார் பார்க்கில் நம்முடைய காரை இலேசில் கண்டு பிடித்து விட முடியாது. காரணம், அங்கு சுமார் 10,000 கார்களாவது கார் பார்க்கில் நிற்கும்.

(வளரும்)

எழுவன்கோட்டை கோயிலில் குட நீராட்டு

தேவகோட்டைக்கு அருகில் எழுவன் கோட்டையிலுள்ள அகிலாண்டேஸ்வரி சமேத விஸ்வநாதர் கோயில் குடநீராட்டுவிழா 24-4-89 அன்று சிறப்பாக நடைபெற்றது. சிவகங்கை அரச குடும்பத்தினரும், மாவட்ட ஆட்சித் தலைவர் பழமலை அவர்களும் குட நீராட்டு விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தனர். முதல் நாள் நிகழ்ந்த சமயப் பேரவையில் திரு. அரு. நாகப்பன், திரு. லெட்சுமி நடேசன், திரு. நா. சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினர். குட நீராட்டு அன்று நிகழ்ந்த பாராட்டு விழாவிற்கு திரு. முத்து கரு. தியாகராசன் செட்டியார் தலைமை தாங்கினார். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் வாழ்த்துரை வழங்கினார். யாக சாலையின் பொறுப்பினை மேற்கொண்ட திரு. கரு. லெ. சந்திரமௌலி செட்டியார் திரு. அதி. வெ. முத்துமாணிக்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றனர். திரு. கே. ஆர். முத்தையா செட்டியார் வரவேற்று நன்றி கூறினார்.

பி. எல். பைனான்ஸ் கிளைத் திறப்புவிழா

பி. எல். பைனான்ஸின் கிளைத் திறப்பு விழா காரைக்குடியில் 24-4-89 அன்று சிறப்பாக நடைபெற்றது. திரு. மு. சித. சிதம்பரம் செட்டியார் தலைமை தாங்கினார். நிறுவனத் தலைவர் திரு. கண. சிற்சபேசன் வரவேற்றார். பொற்கிழிக் கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன், டாக்டர் இராகவன், திரு. அரு. நாகப்பன், டாக்டர் வெ. சு. அழகப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நிறுவனப் பொதுமேலாளர் திரு. வி. எஸ். நாகப்பன் நன்றி கூறினார்.

வடநாடு செல்லும் நகரத்தார் கவனிக்க...

அயோத்தியா (உ. பி), கயா (பீகார்), பிரயாகை (அலகாபாத்- உ. பி.), காசி (உ. பி.) ஆகிய நகரங்களில் உள்ள நாட்டுக் கோட்டை நகரச் சத்திரங்களில் நவீன முறையில் புதிதாக கழிப்பறை, குளியல் அறை வசதிகளை ஏற்படுத்தியும் மேற்படி சத்திரங்களைப் பழுது பார்த்தும் நல்ல முறையில் வைத்து இருப்பதாகவும் அங்கு செல்லும் நகரத்தார் பயணிகள் 'நாட் கோட் சத்திரம்' என்று கேட்டு, விசாரித்து நம்முடைய நாட்டுக் கோட்டை நகரச் சத்திரங்களில் உரிய மகமை கொடுத்து தங்கிக் கொள்ளலாமென ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் செயலாளர் ஆர். எம். முத்தழகப்பன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

தேவை

தமிழில் குறிப்பு, பேரேடு எழுதி ஐந்தொகை எடுத்து கணக்கு முடிக்கத் தெரிந்த நபர் ஒருவர் தேவை. காசி நகர விடுதியில் தங்கியிருந்து கணக்கு எழுத வேண்டும். நகரத்தாருக்கு முன்னுரிமை அளிக்கப் பெறும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

திரு. RM. முத்தழகப்பன்

(செயலாளர், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம்)

நாகப்பா சைக்கிள் மார்ட்
136 A நேதாஜி ரோடு,
மதுரை-625 001

வ. சுப. மாணிக்கனருடன் ஒரு நாள்...

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அலுவலக வேலையாகக் காரைக்குடி சென்றிருந்தேன். மாலையில் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. மூனைவர் வ. சுப. மாணிக்கனரைப் பார்த்தால் "நகரத்தார் குர"லுக்கு ஏதாவது செய்தி கிடைக்கும் என்று அவர்களது 'கதிரகம்'' இல்லம் தேடிப் போனேன். நல்ல வேளையாக அவர்கள் அன்று இல்லத்திலிருந்தார்கள். அவர்களிடம் என்னை நான் அறிமுகம் செய்து கொண்டேன். (என்னை அவர்களுக்கு முன்பே தெரியும். இருந்தாலும் அவர்களிடம் ஒவ்வொரு முறையும் என்னை நான் அறிமுகம் செய்து கொள்வது வழக்கம்.) அவர்கள் என்னை அமரச் சொல்லி 'ஹார்லிக்ஸ்' கொடுத்து உபசரித்தார்கள்.

"உங்களைப் பேட்டி காண வேண்டுமென்று முன்பு ஒருமுறை உங்களிடம் வந்தேன். 'அதெல்லாம் எனக்குப் பிடிக்காது' என்று நீங்கள் கூறினீர்கள். அதனால் உங்களைப் பார்த்து........'' என்று பேச்சைத் தொடங்கினேன்.

"தம்பி அதெல்லாம் வேண்டாம். இப்படி வந்து அமருங்கள். உங்களுக்குச் சில செய்திகளைச் சொல்கிறேன்'' என்று கூறத் தொடங்கினார்கள்.

"உங்கள் இதழில் 40 பக்கங்களில் 20 பக்கங்களைப் பொதுச் செய்திகள், பொதுக் கட்டுரைகளுக்கு ஒதுக்குங்கள். பண வசதி உடையவர்களுக்குத் துதி பாடாதீர்கள். உழைப்பால் உயர்ந்தவர்கள், பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டிருப்பவர்கள், கீழ் மட்டத்திலுள்ளவர்களின் அரிய செயல்களைப் பாராட்டி எழுதுங்கள். தமிழ் இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள். இப்போதுள்ள இளம் தலைமுறையினருக்காக நமது பழக்க வழக்கங்கள், பண்பாடுகளை விளக்கிக் கட்டுரைகளை எழுதி வாருங்கள்'' என்று பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

''நகரத்தார் குரல்'' இதழில் நம் சமூகத்துப் பெரியவர்களைப் பற்றி அவர்களது நினைவு தினங்களில் வெளியிடப் பெறும் கட்டுரைகள் பயனுள்ளவையாக உள்ளன'' என்று பாராட்டினார்கள்.

நான் எழுந்து விடை பெற்றபோது ''தம்பி உங்களுக்குக் கிடைத்திருப்பது நல்லபணி. மற்றவர் பாராட்டும் படியாகச் செய்யுங்கள்'' என்று ஆசி கூறி அனுப்பினார்கள்.

அந்த மாபெரும் தமிழறிஞர் இப்போது நம்மிடையே இல்லை என்பதை எண்ணும்போது நெஞ்சம் கலங்குகிறது.

— எல். சுந்தரம்

நகரத்தார் பயிற்சி மையம்

நகரத்தார் புத்தக வங்கியின் தலைவர் திரு. பழ. இராமசாமி அமைப்பாளராக இருந்து 'நகரத்தார் பயிற்சி மையம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்துள்ளார். பிளஸ் டூ தேர்வு எழுதி மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மைத்துறை வகுப்புகளில் சேர்வதற்கு நுழைவுத் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களுக்கு இந்த மையம் பயிற்சி வகுப்புக்களை நடத்தவிருக்கிறது. 3-5-89 முதல் 3-6-89 முடிய தினமும் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மதுரை தெப்பக்குளத்தில் உள்ள தியாக

ராசர் நன்முறை மேல்நிலைப் பள்ளியில் வகுப்புகள் நடைபெற உள்ளன. இதற்கு விண்ணப்பப் படிவத்திற்கும் பதிவுக் கட்டணத் திற்கும் ரூ. 10/- என்றும் பயிற் சிக் கட்டணம் ரூ. 125/- என்றும் நிர்ணயிக்கப் பெற்றுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புக் களை அனுபவமும் திறமையும் மிக்க ஆசிரியர்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பயிற்சி அளிக்க இருக்கிறார்கள். இந்த அமைப்பிற்கு முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் கௌரவ இயக்குநராகவும் ஆசிரியர் திரு. எஸ். சோமசுந்தரம் ஒருங்கிணைப் பாளராகவும் செயல்பட இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

கல்லூரி முதல்வருக்குப் பாராட்டு விழா

1985-86 ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றுள்ள மதுரை தியாக ராசர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். சொக்கலிங்கம் அவர்களுக்கு திருப்பரங்குன்றம் நகர விடுதியில் 8-4-89 அன்று ஒரு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மதுரை தியாக ராசர் பொறியியற் கல்லூரி முதல் வர் பிஎல். மெய்யப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

திரு. ஆர் எம். முருகப்பன் வரவேற்புரை நல்கினார். பி எல். மெய்யப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் திரு. சொக்க லிங்கம் தேசிய அளவிலும் விருது பெற வாழ்த்துவதாகக் குறிப்பிட் டார்கள்.

அடுத்து பேராசிரியை திரு மதி சுலோசனா சேவுகன் செட்டி, முனைவர் மெ. மெய்யப்பன், முனை வர் ந மாணிக்கம் திரு எம். சி என் மாணிக்கம், கல்லூரி மாண திரு. கு. தமிழரசன், தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் ஆகி யோர் பாராட்டிப் பேசினார்கள்.

முனைவர் எஸ். சொக்கலிங்கம் அவர்கள் ஏற்புரை வழங்கிய போது முதல்வர் பதவி முள்ளின் மேல் இருப்பதற்குச் சமமானது என்றும் தமக்கு இந்த விருது கிடைக்க முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

இத்துடன் பல கல்லூரிகளையும் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்களுக்கு வழி அனுப்பு விழாவும் நடைபெற்றது. முதல்வர் பி எல். மெய்யப்பன் அவர்கள் அவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்கள்.

இறுதியில் தாலாட்டுக் கவிஞர் திரு T. குமரப்பன் பக்க வாத்தியங்களுடன் இசை மழை பொழிந்தார்.

நகரத்தார் புத்தக வங்கியின் தலைவர் திரு பழ. இராமசாமி இவ்விழாக்களை முன்னின்று நடத்தினர்.

இரங்கற் கூட்டம்

காமராசர் மாவட்டம் முத்துராமலிங்க புரத்தில் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு ஊராட்சி மன்றம், கவிமணி மன்றம், ஒருமைப் பாட்டுக் கழகம், இளைஞர் மன்றம் ஆகியவை 16-4-89 அன்று கூட்டாக இரங்கற் கூட்டத்தை நடத்தின.

திரு. குன்றக்குடி பெரிய பெருமாள் தலைமை ஏற்றார். அவரைத் தொடர்ந்து டாக்டர் திரு. நாராயணசாமி, தமிழாசிரியர் திரு. பெருமாள், எழுத்தாளர்கள் திரு. கொ. மா. கோதண்டம், திரு. அய்க்கண் ஆகியோர் குழந்தைக் கவிஞருக்குப் புகழஞ்சலி செலுத்தினர்.

இக் கூட்டத்தில் ஊர்ப் பெருமக்கள் பலரும் 20க்கும் மேற்பட்ட குழந்தைகளும் பங்கு பெற்றனர். இடையிடையே குழந்தைக் கவிஞரின் பாடல்கள் குழந்தைகளால் பாடப் பெற்றன.

நாட்டரசன்கோட்டையில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள்

நாட்டரசன்கோட்டை அருள் மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 1-5-89 அன்று சரியாக காலை 9-34க்கு சிறப்பாக நடைபெற்றது. குடநீராட்டை யொட்டி 28-4-89 முதல் 1-5-89 காலைவரை யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன.

குடநீராட்டில் சிவகெங்கை ராணி அம்மையார் தேவர் திருமகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பழமலை கோவிலூர் ஆண்டவர் மன்றத் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞானதேசிக சுவாமிகள். கலாபடம் பாதரக்குடி ஆதீனம் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குடநீராட்டை முன்னிட்டு 30-4-89 அன்று காலை முனைவர் சரஸ்வதி இராமநாதனும் அன்று மாலை நாடடரசன்கோட்டை கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. இராம ஆவிச்சியும் சொற்பொழிவாற்றினர்.

1-5-89 அன்று மாலை மகா அபிஷேகமும் இரவு மருதுபாண்டியன் இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும் நள்ளிரவு வெள்ளி ரதத்தில் அம்மன் திருஉலாவும் நடைபெற்றன.

நாட்டரசன்கோட்டை தீர்த்தார்குளம் தேசிக விநாயகர் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாவும் 1-5-89 அன்று சரியாக காலை 7-05க்கு சிறப்பாக நடைபெற்றது.

குடநீராட்டை யொட்டி 28-4-89 முதல் 1-5-89 அதிகாலை வரை யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன. அன்று பகல் மகா அபிஷேகமும் இரவு வெள்ளி மூஷிகவாகனத்தில் தேசிக விநாயகர் திருவீதி உலாவும் நடைபெற்றன.

பாதயாத்திரை

தேவகோட்டையிலிருந்து திருச்செந்தூருக்குப் பதின்மூன்ரும் ஆண்டாகப் பாதயாத்திரைக் காவடி 13-4-89 அன்று புறப்பட்டு 150 மைல்கள் நடந்து திருச்செந்தூருக்கு 20-4-89 அன்று இனிதே சென்றடைந்தது. சுமார் 1000 பக்தர்கள் நடந்து சென்றனர். திருத்தொண்டர் திரு. வயிரவன் வழிநடத்திச் சென்ருர். 20-4-89 மாலையில் 2 காவடிகளும் 42 பாற்குடங்களும் செந்திலாண்டவனுக்குச் செலுத்தப் பெற்றன. அன்று நடந்த வாழ்த்தரங்கிற்குக் கலாமடம் பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தலைமை தாங்கினர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வாழ்த்துரை வழங்கினர். 'அருள் தொண்டர்' திரு. கண. சந்திரசேகரன் நன்றி கூறிஞர்.

பட்டி மண்டபம்

பாகம்பிரியாள் ஆலயத்தில் 15-4-89 இரவு செல்வி அரு. ஸ்ரீ தேவி தலைமையில் 'நால்வர் காட்டிய நன்னெறி' என்ற பொருளில் பாலர் உரை அரங்கம் நடைபெற்றது. இரவு 8 மணிக்கு 'இராம காதைக்கு ஏற்றம் தரும் பாத்திரம் சிலை பிடித்த செல்வனே ......சிறை இருந்த செல்வியே...' எனும் பொருளில் பட்டி மண்டபம் நிகழ்ந்தது 'சிலை பிடித்த செல்வனே' என்ற அணியில் டாகடர் சபா. அருணசலம், செல்வி ச. உமாமகேஸ்வரி, கவிஞர் வே. பழனியப்பனும் 'சிறை இருந்த செல்வியே' எனும் அணியில் வன்ரெண்டர் கி. சங்கரன், அலமேலு முகுந்தன், கவிஞர் சேது அருணசலமும் வாதாடினர். நடுவர் பொறுப்பேற்ற புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் 'சிறை இருந்த செல்வியே' என்று தீர்ப்பு வழங்கினுர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ வேந்தன்பட்டி ஊராட்சி மன்றத்தின் தலைவர் திரு. அழகப்ப செட்டியாரின் புதல்வர் டாக்டர் திரு. ஏஎல். ஆறுமுகம் ஆஸ்திரேலிய நாட்டில் ஈகிள்மௌட் என்ற நகரில் மருத்துவராகச் சேவை புரிந்து வருகிறார்.

ஃ மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சித்திரைத் திருவிழாவையொட்டி 18-4-89 அன்று நடைபெற்ற திருக்கல்யாண நிகழ்ச்சியை மதுரை வானொலி நிலையம் ஒலி பரப்பியது. இந்நிகழ்ச்சியில் முனைவர் வெ. சு. அழகப்பன் அவர்களும் பேராசிரியை திருமதி சி. எஸ். விசாலாட்சியும் நேர்முக வர்ணனை செய்தனர்.

ஃ உ. சிறுவயல் தமிழ் இலக்கிய மன்றத்தின் 26 ஆம் ஆண்டு விழா உ. சிறுவயலில் 7 & 8-5-89 ஆகிய இரு தினங்கள் நடைபெற உள்ளன.

ஃ கண்டவராயன்பட்டி சிவன் கோயிலின் நிர்வாக அறங்காவலர்களாக திரு. சே. அழகப்பனும் திரு. தி. இராமநாதனும் பொறுப்பேற்று 14-4-89 முதல் சேவை புரிந்து வருகின்றனர்.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவில் வைகாசித் திருவிழாவிற்கு 12-5-89 அன்று (சித்திரை மீ 29 உ) காப்புக் கட்டுகிறார்கள். 19-5-89 எட்டாம் திருவிழாவன்று அம்மன் வெள்ளிரதத்தில் உலாவரும். 20-5-89 அன்று வைகாசி விசாகம் - தேர்.

ஃ அலவரக்கோட்டை சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 5-6-89 (வைகாசி மீ 23உ) அன்று நடைபெற திருப்பணி வேலைகள் மும்முரமாக நடை பெற்று வருகின்றன.

ஃ இளையாத்தக்குடிக் கோயில் கழனிவாசல் பிரிவு ஆதிகேசவப் பெருமாள் கோயில் குட நீராட்டு விழா 24-4-89 அன்று சிறப்பாக நடைபெற்றது. குட நீராட்டு விழாவின்போது தாலாட்டுக் கவிஞர் வேந்தன்பட்டி திரு. T. குமரப்பன் நேர்முக வர்ணனை செய்தார்.

ஃ 'நாநயா' வின் மூன்ருவது செயற்குழுக் கூட்டம் 12-3-89 அன்று பாகனேரியில் பெரி. அழ. மு. நாராயணன் செட்டியார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

ஃ காரைக்குடித் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப் பெற்ற திரைப் பட இயக்குநர் திரு இராம. நாராயணனுக்கும் சென்னை உயர் நீதி மன்றத்தின் அரசு வழக்குரைஞராக நியமிக்கப் பெற்ற வழக்குரைஞர் திரு. ஏஆர். லெட்சுமணனுக்கும் சென்னை நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் 18-4-89 அன்று டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு பாராட்டு விழா நடை பெற்றது.

ஃ அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் கிளைகளை சிவயோக புரத்திலும் (இராங்கியம்) குரு விக்கொண்டான் பட்டியிலும் 17-4-89 அன்று அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் தமிழ் மாநில அமைப்புத் தலைவர் திரு. கரு. அண்ணாமலை துவக்கிவைத் தார்.

ஃ குருவிக்கொண்டான்பட்டி கவி மணி மன்றத்தின் 31ஆம் ஆண்டு கவிமணி விழா 17-4-89 & 18-4-89 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.

ஃ விழுப்புரத்தில் நகரவிடுதி கட்டுவதற்காக விழுப்புரம் நகரத் தார் சங்கம் 3220 ச. அடி. மனை வாங்கி கட்டிடம் கட்டுவதற்கு அனுமதியும் பெற்றுள்ளது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கமும் திருச்சி செட்டிநாடு சிட் பண்டஸ் நிறுவனமும் இணைந்து திருச்சி யில் 6-5-89 அன்று குழந்தை கள் தின விழாவை நடத்துகின் றன.

ஃ சிங்கப்பூர் அருள்மிகு தெண் டாயுதபாணி கோயில், சிங்கப்பூர் அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு அரிம எம் அ. சா. அண்ணாமலை செட்டி யார் அவர்கள் நிர்வாக அறங்கா வலராக ஏகமனதாகத் தேர்வு செய்யப் பெற்று 24-1-89 முதல் சேவை செய்து வருகிருர்கள்.

வானதி ஏற்படுத்தியுள்ள அறக் கட்டளை!

வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ஏ. திருநா வுக்கரசு அவர்கள் தமது 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாவில் அறிவித்தபடி தமது தந்தையார்-தாயார் பெயரில் 'வானதி ஏகப் பர்—காளியம்மை அறக் கட்டளை' ஒன்றை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏறபடுத்தி யுள்ளார்கள் இதற்காக அவர் கள் ரூ 10, 000/- நன்கொடை வழங்கியிருக்கிருர்கள்.

இதற்கான தொடக்க விழா அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தின் சாஸ்திரி ஹாலில் 17-4-89 அன்று நடைபெற்றது. அண்ணா மலைப்பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் தலைமையில் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் மேற்படி அறக் கட்டளை யைத் தொடங்கி வைத்தார்கள்.

கவியரசு கண்ணதாசனின் நினைவு நாளன்று (அக்டோபர்-17) அவரது படைப்புக்களைப் பற்றிப் பேசுகிறர்கள். கவிஞர் களைக் கொண்டு சொற்பொழி வாற்ற இவ் வறக்கட்டளை ஏற் படுத்தப் பெற்றுள்ளது.

காரைக்குடி நகரச் சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா


காரைக்குடி நகரச் சிவன் கோயில் 120 ஆண்டுகட்கு முன்னர் அமைக்கப் பெற்றதாகும். நகரச் சிவன் கோயில்களில் முதலில் தோன்றியது இதுவே யாகும்.

இக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் இதற்கு முன்னர் 1872, 1888, 1953, 1974 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளன.

இதன் ஐந்தாவது குட நீராட்டு விழா 10-4-89 (பங்குனி மீ 28உ) காலை 10 மணி அளவில் கோலாகலமாக நடைபெற்றது. இவ் விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிக சுவாமிகள், புதுக்கோட்டை தவத்திரு சாந்தானந்த சுவாமிகள் கல்மடம்-பாதரக்குடி ஆதீனம் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருப்பணிக் குழுச் செயலாளர்கள் திரு ம. செ. மு. முத்துராமன் செட்டியார், திரு. சேவு. சிங்காரம் செட்டியார் பொருளாளர் திரு அண்ணாமலை செட்டியார் ஆகியோர் செம்மையாகச் செயலாற்றினர். மற்ற அன்பர்களின் அக்கறையும் போற்றுதற்குரியது.

திரு. பிச்சுமணிக் குருக்கள் யாகசாலை ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார். வேத பாராயணம், பன்னிருதிருமுறை, நாதசுரக் கச்சேரி சிறப்பாய் நிகழ்ந்தன. அன்று மாலை 5 மணி அளவில் மகா அபிஷேகமும் இரவு 8 மணி அளவில் திருக்கல்யாணமும் இரவு 10 மணி அளவில் பஞ்சமூர்த்திகள் திரு



குடமுழுக்கு நடைபெற்ற காரைக்குடி நகரச் சிவன் கோயில்.

உலாவும் சிறப்பாக நடைபெற்றன.

இத் திருக்குட நன்னீராட்டு விழாவையொட்டி காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் சார்பில் 8-4-89 அன்று 'அபிராமி அந்தாதி' என்ற தலைப்பில் திரு. சுகி. சிவம் இலக்கிய உரை ஆற்றினர். 9-4-89 அன்று மாலை 'பொற்கிழிக் கவிஞர்' பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் தலைமையில் 'ஆண்டவன் படைப்பில் ஐம்பூதங்கள்' என்ற தலைப்பில் கவியரங்கமும் 'இவள் என் தாய்' என்ற தலைப்பில் திருமதி இளம்பிறை மணிமாறனின் இலக்கிய உரையும் நிகழ்ந்தன.

10-4-89 குடநீராட்டு விழாவன்று இரவு 'குற்றம் என்றதும் குற்றமே' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. பேராசிரியர் திரு. பா. நமச்சிவாயம் நடுவர் பொறுப்பேற்ருர்.

அன்று இரவு 10 மணி முதல் நடு நிசி 2 மணி வரை 'வயலின் மேதை' திரு. குன்னக்குடி வைத்திய நாதன் குழுவினரின் வயலின் கச்சேரி சிறப்பாக நிகழ்ந்தது.

திருக்குட நன்னீராட்டு விழாவையொட்டி முனைவர் வெ. சு. அழகப்பன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு ஒரு சிறப்பு மலர் தயாராகி வருகிறது.

தஞ்சையில் ரத உற்சவ விழா

தஞ்சைப் பெரிய கோயிலின் 1989 ஆம் ஆண்டு சைத்ர பிரமோத்சவ விழாவில் நகரத்தார் ரத உற்சவ மண்டகப்படி 17-4-89 அன்று சிறப்புடன் நடைபெற்றது. அன்று காலையில் சுவாமிக்கு அபிஷேகமும் மாலையில் தாராபுரம் என். சுவாமிநாதன் எஸ். இளங்கோவன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றன. நகரத்தார் பெருமக்கள் குடும்பத்தோடு கலந்து கொண்டனர். மண்டகப்படிக்கான ஏற்பாடுகளை நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. ஆர் எம். ஜோதிலிங்கம் சிறப்பாகச் செய்திருந்தார்.

வைத்தீஸ்வரன்கோவில் நடைப் பயண அன்னதானக் குழு

தஞ்சாவூரில் வாழும் நகரத்தார்களால் 'வைத்தீஸ்வரன் கோவில் நடைப் பயண அன்னதானக் குழு' என்ற ஒரு அமைப்பு இவ்வாண்டு ஏற்படுத்தப் பெற்றுள்ளது. இவ்வமைப்புக்கு திரு. ந லெட்சுமணன் தலைவராகவும் திரு.அண. சோமசுந்தரம் துணைத் தலைவராகவும் திரு. இராம. ஜோதிலிங்கம் செயலாளராகவும் திரு. சித. சாத்தப்பன் இணைச் செயலாளராகவும் திரு. ஜெமினி ஒய். பழநியப்பன் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் பாத யாத்திரையாகச் சென்ற பக்தர்களுக்கு கந்தர்வ கோட்டையிலிருந்து தஞ்சாவூர் வரை நடமாடும் மருத்துவ ஊர்தி ஏற்பாடு செய்து தஞ்சாவூர் நகரத்தார் மொத்த மருந்து வியாபாரிகள் அளித்த மருந்துகள் தேவை ஏற்பட்டபோது வழங்கப் பெற்றன. தஞ்சை-நாகை சாலையில் வண்டிக்கார அம்பலகாரத் தெருவிலிருக்கும் மீனுட்சி விலாஸ் ரைஸ் மில்லில் 21-4-89 இரவு 10 மணி முதல் 22-4-89 காலை 10-30 மணி வரை அனைவருக்கும் பலகாரம் வழங்கப் பெற்றது.

திருமணம்

சொக்கநாதபுரம் சுப. சதாசிவம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கலைச் செல்விக்கும் சொக்கனேந்தல் பழ. சுப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் பழநியப்பன் என்ற சேகருக்கும் 20-4-89 அன்று சொக்கநாதபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

குழந்தைகளுக்கு ஒரு வள்ளியப்பா

— லேனா தமிழ்வாணன் எம். ஏ. —

(மறைந்த 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களைப் பற்றி ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா அவர்கள் இக்கட்டுரையில் நம்மோடு தம்முடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.)

மூதறிஞர் ராஜாஜி ஒருமுறை அழ. வள்ளியப்பா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோது ''குழந்தைகளுக்கு அழுவதற்கு ஒரு வள்ளியப்பா இருக்கிறாரே'' என்றாராம். 'அழ' என்பதை 'அவர்களுக்காகக் குரல்கொடுக்க' என்ற பொருளில் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

என் தந்தை திரு. தமிழ்வாணன் அவர்களும் குழந்தை எழுத்தாளராகத் தான் எழுத்துலகிற்கு அறிமுகமானார்கள். ஆனால் அக்குழந்தைகள் வளர வளர தன் எழுத்துக்களையும் வாலிபமாக்கிக் கொண்டார்கள். ஆனால் அழ. வள்ளியப்பா இந்தப் 'பிரமோஷ'னை ஒரு போதும் விரும்பியதே இல்லை.

தமிழிலக்கியத்தில் குழந்தை இலக்கியம்தான் மிகவும் பலவீனமான பகுதி. அக்குறையை நீக்குவது என அழ. வள்ளியப்பா அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். கடைசிவரை உழைத்தார்கள்.

தமிழில் குழந்தை இலக்கியத்திற்கு ஓர் அழ வள்ளியப்பா கிடைத்திருக்காவிட்டால் அது எவ்வளவு பெரிய சூன்யமாகியிருக்கும் என்பதை இலக்கியவாதிகள் நன்கு உணர்வார்கள். பலபேர் எழுத்துலகில் வாரிசுகளை விட்டுச் செல்வதில்லை. ஆனால் நம் அருமைக் கவிஞர் அவர்கள் தனக்குப் பின்னும் வாழையடி வாழையாகப் பலரும் வரவேண்டும் என்ற விருப்பத்தில், இன்னார் இதற்குத் தகுதியுடையவர் என்று முடிவு செய்து, அவர்களையெல்லாம் தனக்குப் போட்டியாக வருவார்கள் என்று எண்ணாமல், பெரிய உள்ளத்துடன் குழந்தை இலக்கியச் சங்கத்தின் உதவியுடன் ஊக்குவித்தார்கள். அதனால் தான் அவரால் ஒப்பாரும் மிக்காரும் இன்றி வளர முடிந்தது.



இறுதிக் காலத்தில் 'ஈஸி சே'ரே கதி என்று கிடக்கிறவர்கள் மத்தியில் குழந்தைக் கவிஞரை ஒரு சாதனையாளர் என்பேன். ''கோகுலம்'' இதழின் கௌரவ ஆசிரியராகத் தொடர்ந்து அமர்ந்து அதை நடத்தி வந்ததும், குழந்தை இலக்கியச் சங்கக் கூட்டத்தின் கட்டுக்கோப்புக் கலையாமல் காத்து வந்ததும் என்

வாதத்திற்குப் பலம் சேர்க்கும் உதாரணங்கள்.

படுக்கையில் கிடந்து நோயுற்று அவர்கள் இயற்கை எய்தவில்லை. தன் கடமைகளை நிறைவேற்றச் சென்ற இடத்தில் தான் இயற்கை எய்தினர்கள். மரணத்திலும் எத்தகைய உயரிய மரணம்!

'பிள்ளைக் கவியரசு' என்றும்' 'மழலைக் கவிச் செம்மல்' என்றும் பல பட்டப் பெயர்கள் இருந்த போதும் அவர்கள் மிகவிரும்பியது 'குழந்தைக் கவிஞர்' என்ற பட்டத்தையே. அதை வழங்கியவரின் மகன் என்ற முறையில் நான் அவர் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தேன். அவர்களது பண்பாலும் ஈர்க்கப்பட்டேன்.

கவிஞரது மரணம் தெரிவிக்கப் பட்டபோது ஓர் குடும்ப உறுப்பினரை - இரத்த சொந்தத்தை இழந்ததுபோல் வேதனை அடைந்தேன். உடனே சுதாரித்துக் கொண்டு, பம்பரமாகச் சுழன்றேன். ''கல்கி'' அலுவலகத்திற்கும் தொலைக்காட்சி நிலையத்தின் இயக்குநருக்கும், அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவு ஆசிரியருக்கும் போன் செய்து சொன்னேன். இவை போக அவரை நன்கு அறிமுகமானவர்களுக்கெல்லாம் தகவல் சொன்னேன். எல்லோருமே சொல்லி வைத்தது போல் அதிர்ந்தார்கள். 'நன்ருகத் தானே இருந்தார்' என்ருர்கள். நம்ப மறுத்தார்கள்.

எனக்கும் அவர்களுக்கும் தலைமுறை இடைவெளி இருந்ததால் நெருங்கிப் பழக வாய்ப்பு இல்லாமல் இருந்தது. என் தங்கையின் திருமணத்தின்போது கவிஞர் அவர்கள் இந்தியன் வங்கியில் காரைக்குடியின் வட்டார மேலாளராக இருந்தார்கள். அப்போதெல்லாம் வங்கியில் லாக்கர் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பு மாதிரி. நான் போய்ப் பார்த்துச் சொன்னதுமே இருக்கிற நிலவரத்தை எடுத்துச் சொல்லி பிறகு பெரிதும் முயன்று ஒரு லாக்கர் கிடைக்க ஆவன செய்து தந்தார்கள்.

''நான் தான் லேனு தமிழ்வாணன். அப்பாவுக்குப் பிறகு இப்போது கல்கண்டு...'' என்று ஆரம்பித்த என்னை, ''பூவுக்கு அறிமுகம் தேவையா?'' என்ருர்கள். பூரித்துப் போனேன்.

கடைசிவரை எளிய வாழ்வு வாழ்ந்தவர்கள் கவிஞர் அவர்கள். ஆடம்பரத்திற்கு ஆசைப்பட்டதில்லை அவர்கள். நானும் அவர்களும் ஒரே மேடையில் பேசினல் அவர்கள் பேசி முடித்துக் கூட்டம் முடியும் வரை இருந்து, அவர்களை வீட்டில் கொண்டு வந்து விட்டு

விட்டுப் போவேன். ''எனக்குக் கால் கடுப்பது மட்டும்தான் தொல்லை. வேறு ஒரு தொல்லையும் இல்லை. இது இல்லாவிட்டால் உங்களை நான் தொந்தரவு செய்ய மாட்டேன்'' என்று அன்போடு குறிப்பிடுவார்கள் வீட்டுவாசலில் இறங்கிக் கொண்டு கையசைத்து விட மாட்டார்கள். உள்ளே வந்து ஏதும் சாப்பிட்டு விட்டுப் போக வில்லை என்றால் விட மாட்டார்கள். ''லேனா காப்பி சாப்பிட மாட்டாக. ஹார்லிக்ஸாவது மோராவது கொடு!'' என்று நினைவாக அடுக்களைக்குக் குரல் கொடுப்பார்கள்.

அவர்கள் வயதென்ன, என் வயதென்ன? ஆனாலும் என்னை எப்போதும் 'வாங்க, போங்க' தான். ரொம்பவும் மரியாதை தெரிந்த பண்பாளர். அவர்கள் அதிர்ந்து பேசி, பிறர் வருத்தப் படும்படி நடந்து, நான் அறியேன்.

ஒரு முறை தன் துணைவியார் திருமதி வள்ளியம்மைஆச்சி அவர்களுக்கு 60 ஆவது பிறந்த நாள் என்று அழைப்பு அனுப்பினார்கள். அழைப்புக் கையில் கிடைத்த சில மணி நேரத்திற்கெல்லாம் அவர்களுடைய போன்: ''அவசியம் வந்துடுங்க தம்பி'' என்று.

''என்னண்ணே! ரொம்பப் புதுமையா இருக்கே! செட்டிமார்கள் தாம் மணிவிழாக் கொண்டாடுவார்கள். ஆச்சிக்கு மணி விழாவா?''

''ஆமாமா. அவுங்களும் நம்மைப் போலத் தானே? அவுங்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட வேணுமா?'' என்றார்கள். அதன்படி கலந்து கொண்டேன். அது தான் நான் அவர்களோடு நன்கு கலந்து உரையாடிய விழா.

குழந்தைகளை மட்டும் இல்லாமல் பெண்மையையும் மதித்த பேருள்ளம் நம் குழந்தைக் கவிஞருக்கே உரித்தானது.

தமிழ்ப்பிள்ளைகள் எதுவாக இருந்தாலும் சரி குடும்ப உறுப்பினர்களுக்குப் பிறகு குழந்தைக் கவிஞர் தான் அவர்களுக்கு நன்கு அறிமுகமான நபர். வட்டமான தட்டையும், மாம்பழமாம் மாம்பழத்தையும் பாடாத பிள்ளைகள் எங்கே இருக்கின்றன சொல்லுங்கள்?

— சந்திப்பு: கோதை.

வாசகர் இராமசாமி பாராட்டுகிறார்

நம் சமூகத்திற்கென எத்தனையோ இதழ்கள் வெளிவந்தன. ஆனால் அவைகள், போதுமான நிதி வசதியில்லாததாலும், நம்மவர்களின் ஆதரவு இல்லாததாலும் தொடர்ந்து வெளிவராமல் நின்று விட்டன. ஆனால் நம் ''நகரத்தார் குரல்'' பல ஆண்டுகளாகக் கண்ணைக் கவரும் அழகிய அட்டைப்படங்களுடன் கருத்தைக் கவரும் பலசெய்திகளையும் கட்டுரைகளையும் தாங்கித் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. நம் சமூகச் செய்திகளை அழகாக விரிவாக வெளியிட்டு வருகிறது ''குரல்.'' பல ஊர்களில் வசித்து வரும் நகரத்தார் பற்றிய புதிய புதிய செய்திகளை, ''செய்திகள் வாசிப்பவர்'' பகுதி மூலம் அறிந்து கொள்ள ''குரல்'' ஒரு சிறந்த சாதனமாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கதாகும். நம் சமூகத்திலுள்ள பல எழுத்தாளர்களுக்கும் ''நகரத்தார் குரல்'' மதிப்பளித்து அவர்களது நல்ல கட்டுரைகளை மற்றும் துணுக்குகளை நல்ல முறையில் வெளியிட்டு வருகிறது! குறிப்பாக செலவைப் பார்க்காமல் ஒளிப் படங்களைத் தாராளமாக வெளியிட்டு வருகிறது.

ராம வ. இராமசாமி
கோட்டையூர்.

சோம. நாராயணன் செட்டியாருக்குப் பாராட்டு

தேவகோட்டை நகரச் சிவன் கோயில் குடநீராட்டு சிறப்பாக நடைபெறத் தொண்டாற்றிய சோம. நாராயணன் செட்டியார் அவர்களுக்கு தேவகோட்டை ஸ்ரீ தண்டாயுதபாணி கார்த்திகை அபிஷேகக் குழுவின் சார்பில் 12-3-89 மாலை சிதம்பர விநாயகர் கோயிலில் ராம. அரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. திரு. ஆண்டான் விசுவநாதன் செட்டியார் வரவேற்றார். தொழிலதிபர் திரு. உ. மு. லெ. மெ. மெய்யப்ப செட்டியார் திரு. சோம. நாராயணனுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. பாராட்டிப் பேசினர். திரு. லெ. கதிரேசன் செட்டியார் நன்றி கூறினார். இவ்விழாவில் திரு. சோம. நா. வுக்கு 'திருப்பணிச் செம்மல்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

திருமணம்

'காசிஸ்ரீ' திருநாவுக்கரசு செட்டியாரின் பேரன் செல்வன் சேதுராமனுக்கும் தேவகோட்டை திரு. சுப. அண்ணாமலை செட்டியார் மகள் செல்வி வள்ளியம்மைக்கும் தேவகோட்டையில் 24-3-89 அன்று திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. அருளாடியார் திரு. பழநியப்ப செட்டியார் மணமக்களை வாழ்த்தினார். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் வாழ்த்துக் கவியரங்கம் நிகழ்ந்தது. திரு. சுந்தரதாசன் வரவேற்றார். கவிஞர்கள் சேது அருணாசலம், மீனவன், இராம வீரப்பன், வெ. பழநியப்பன், கா. நாகப்பன், சபா. அருணாசலம் ஆகியோர் வாழ்த்துக் கவி பாடினர். திரு. இராம. சேதுராமன் நன்றி கூறினார்.

நாட்டரசன்கோட்டையில் விராட பருவம் தொடர் சொற்பொழிவு

நாட்டரசன்கோட்டை ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் கோவில் குட முழுக்கு விழாவிற்கு மழை பெய்ய வேண்டி நாட்டரசன்கோட்டையில் 14-4-89 முதல் 16-4-89 முடிய மூன்று நாட்கள் 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்கள் மகாபாரதம்– விராட பருவம் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்தினார்கள்- மூன்றும் நாள் பட்டாபிசேகத்தன்று ஆசிரியர் திரு. ராஜாராம் இறைவணக்கம் பாட, திரு. குப. சொக்கலிங்கம் வரவேற்றார். 'காசிஸ்ரீ' அரு. சோ. வுக்கு நகரத்தார்கள் சார்பில் குட நீராட்டு விழாக்குழுத் தலைவர் திரு. ஞா. ஆறுமுகம் செட்டியார் பொன்னாடை போர்த்தி, நிகழ்ச்சி உபயதாரர்கள் திரு. குப. சொக்கலிங்கம், திரு. லெ. மா. மகாதேவன் அளித்த பரிசுப் பொருட்களை வழங்கினார்கள். திரு. குப. அ. ராம இராமநாதன் செட்டியார் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. வுக்குப் பொன்னாடை போர்த்தி ஆசி கூறினார். திரு. சுப இராமநாதன் செட்டியார் பாராட்டிப் பேசினார். திரு. உ. கருப்பையா செட்டியார் நன்றி கூறினார். விராட பருவ தொடர் சொற்பொழிவினை அடுத்து இரண்டொரு தினங்களில் நாட்டரசன்கோட்டையிலும் அதனைச் சுற்றி உள்ள ஊர்களிலும் நல்ல மழை பெய்துள்ளது.

திருமணம்

கண்டரமாணிக்கம் செ. சி. நா. க நா. கந்தசாமி செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வானைக்கும் பாகனேரி ஆவி. உல. சுப. கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் காந்திராஜனுக்கும் 7-4–89 அன்று கண்டரமாணிக்கத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

குழந்தைக் கவிஞர் ஒரு சகாப்தம்


எஸ். எம். பழநியப்பச் செட்டியார்

குழந்தைக் கவிஞர் என்ற பெயர் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக பிஞ்சு நெஞ்சங்களில் அழுத்தமாகப் பதிந்த ஒன்று. சின்னச் சின்னச் சொற்களால் நல்லபண்பு நாற்றுகளை வளரும் மன வயல்களில் பயிராக்கிய பெருமை அவருக்கே உரியதாகும்.

எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு குறுகுறு நடந்து, சிறுகை நீட்டிய பருவந்தொட்டே தொடங்கியதாகும். ஆம் அடுத்தடுத்த வீட்டினிலே பிறந்து. ஆடலிலும் பாடலிலும் கலந்து, ஒன்றாகப் படித்து, பள்ளியிலும் ஒன்றாக இணைந்து நடத்தும தொழிலினிலும் ஒரு துறையில் மலர்ந்தோம். அதுபோலவே அவர் மறைந்த அன்றும் தொலைக்காட்சியில் அவருக்கான அஞ்சலியும் அடுத்து நான் பங்கேற்ற ''வளர்தமிழ்'' நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்பட்டது எதிர்பாராமல் அமைந்தது.


சிறு வயது முதலே அவர் துடிப்புடன் விளங்கினார். இலக்கிய ஆர்வம் இளம் வயதிலேயே அவரிடம் வேரூன்றி இருந்தது, எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும், சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டுமிருப்பார் அவர் இருக்கும் இடத்தில் கலகலப்புக்குக் குறைவில்லை.

நான் தொழில் தொடங்கிய நாட்களில் அவர் வீட்டில்தான் தங்கியிருந்தேன் அப்போதெல்லாம் அவர் இதழ்களில் எதையாவது எழுதி வெளியிட்டுக்கொண்டேயிருப்பார். நான் சொல்வேன் ''எழுதி எழுதி என்னிடம் கொடு. நான் அவற்றைப் புத்தகமாகப் போடுகிறேன்'' என்று. அவரின் ''மலரும் உள்ளம்'' என்ற முதல் நூலை நான் வெளியிட்டேன். அந்நூல் குழந்தைகளிடையே மிகுந்த ஆதரவைப் பெற்றது. இப்படி, குழந்தைகளுக்காகவே எழுதிய ஒரு குழந்தை எழுத்தாளரை அறிமுகப்படுத்திய பெருமையை நான் அடைந்தேன். தொடர்ந்து அவர் நிறைய எழுதினார். பலநூல்களை எங்கள் 'பழனியப்பா பிரதர்ஸ்' நிறுவனம் வெளியிட்டது.



அமரர் திரு அழ. வள்ளியப்பா

குழந்தை எழுத்தாளர்களை உருவாக்க, சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற ஆசையை அவர் என்னிடம் கூறினார். அதை நிறைவேற்றும் வாய்ப்பினை நான் பெற்றேன். என் இல்லத்தில் தான் 1950ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் தொடங்கப் பெற்றது. அதன் வளர்ச்சி இன்று வியப்பூட்



கவிஞர் திரு. காசு. மணியனுக்குக் கல்கத்தாவில் நடைபெற்ற பாராட்டு விழாவில் எழுத்தாளர்களுக்கு மத்தியில் - திரு. மணிய னுக்கு அடுத்து குழந்தைக் கவிஞர்.

டும் வகையில் உள்ளது. ஆயிரக் கணக்கான குழந்தை எழுத்தாளர் களை உருவாக்கிய பெருமை அதனைச் சாரும் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குத் தரமான நல்ல நூல்கள் கிடைக்க வள்ளியப்பா தலைமையிலான குழந்தை எழுத் தாளர் சங்கம் வழி வகுத்தது என் பதை நினைக்கும்போது என் நெஞ்சம் மகிழ்ச்சியில் திளைக் கிறது. அவர் இல்லாவிட்டால் குழந்தை இலக்கியம் இவ்வளவு மேன்மையடைந்திருக்காது. தன் உடல்நிலையைக் கூடப் பொருட் படுத்தாமல் அவர் குழந்தை இலக் கிய வளர்ச்சிக்காக உழைத்தார். அவரது வளர்ச்சிக்கு உறுதுணை நின்ற அவர் தம் துணைவியார் வள்ளியம்மை ஆச்சிக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள் ளோம்.

அவரது பாடல்களை சிறிய வர்கள் மட்டுமின்றி பெரியவர் களும் படித்து ரசித்து மகிழ்கின்ற னர். அனைவரிடமும் இனிமை யாகப் பழகும் சுபாவம் கொண்ட அவர் ராஜாஜி, கவிமணி, சேதுப் பிள்ளை ஐயன் பெருமாள் கோனார், கல்கி, டாக்டர் மு. வ. நாமக்கல் கவிஞர் போன்ற பேரறி ஞர்களின் அன்புக்கும் பாராட்டுக் கும் உரியவராக விளங்கினார்.

அவர் மறைவு இலக்கிய உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் அவரைப்போல ஒரு கவிஞரை, நல்ல நண்பரை குழந் தைகளுக்காகவே வாழ்ந்த உயர்ந் தவரை இனி என்றுகாண்போமோ என்ற ஏக்கம் என்நெஞ்சில் அலை மோதுகிறது. பாசமிக்க ஒரு உடன் பிறப்பாக அவர் என்னிடம் பழகினார். அவர் மறைவு என் னால் தாங்க இயலாதது. அவரு டன் பழகிய பசுமையான நினைவு கள் என் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

நகரத்தார் மரபுக்குப் பெரு -மை சேர்க்கப் பிறந்த குழந்தைக் கவிஞர் ஒரு சகாப்தம். அவரது பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அவரது நூல்கள் பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எனவே அவரது பெயர் நம்நாட் டுக் குழந்தைகளின் இதழ்களில் உச்சரிக்கப்பட்டு, உள்ளங்களில் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. குழந்தைக் கவிஞர் இறந்தாலும் அவருடைய படைப்புகளில் அவர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்.

உங்கள் குரல்

திரு. வி. ஆர், சின்ன அருணாசலம் நாட்டுப் புறப் பாடல்களாகத் தொகுத்திருந்தவைகள் கருத்தைக் கவரும்வகையில் அமைந்திருந்தன.

பழ. வள்ளியப்பன்
தஞ்சாவூர்

குழந்தைக் கவிஞருக்கு ''நகரத்தார் குரல்'' மிகச் சிறப்பாக அஞ்சலி செலுத்தியுள்ளது. குழந்தைக் கவிஞரின் பெருமைகள் என் போன்றோருக்கு இதற்கு முன்பு அவ்வளவாகத் தெரியவில்லை.

எஸ். நாராயணன்
திருச்சி

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றி முனைவர் தமிழண்ணல் அவர்களும் திரு. எல். சுந்தரமும் எழுதியுள்ள கட்டுரைகள் அவரது அன்பிற்கு, பண்பிற்கு, பெருமைக்குச் சான்றாக உள்ளன.

வீர. அருணாசலம்
சென்னை

செய்திகளை விரைவாகவும் விரிவாகவும் வெளியிடுவதில் ''நகரத்தார் குர''லுக்கு இணையான சமூக இதழ் இல்லை. குழந்தைக் கவிஞரின் மரணம் பற்றியும் அவரது பெருமைகள் பற்றியும் விரிவாக வெளியிட்டிருப்பது அவருக்குச் செய்துள்ள சிறந்த அஞ்சலியாகும்.

சுப. நாராயணன்
மதுரை

ஏப்ரல்' 89 ''நகரத்தார் குரல்'' அட்டைப் படம் வெகு அழகு. பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுகிறது. காலத்திற்கேற்றவாறு அட்டைப் படம் வெளியிடுவதில் ''நகரத்தார் குர''லுக்கு ஈடு இணை இல்லை.

சி. தேனப்பன்
கோவை

அழகிய அட்டைப் படம், சிறப்பான செய்திகள், குழந்தைக் கவிஞர் பற்றிய படங்கள், கட்டுரைகளுடன் ஏப்ரல்' 89 இதழ் அருமையாக வெளிவந்திருக்கிறது. பாராட்டுக்கள்.

வி. சுப்பிரமணியன்
சிவகாசி

இயற்கை எய்தினர்

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனின் முன்னாள் இயக்குனரும் பாங்க் ஆப் மதுரை லிட்டின் இயக்குனருமான என். கருப்பஞ் செட்டியார் அவர்களது தந்தையார் கீழப்பூங்குடி கூ. நா. சித. நாராயணன் செட்டியார் அவர்கள் 9-3-89 அன்று இரவு இயற்கை எய்தினர்கள்.

திருமணம்

மதகுபட்டி சுப. சுப. செரக்க லிங்கம் செட்டியார் அவர்கள் பேத்தியும் மதுரை சுபம் டிராவல் ஏஜன்ஸியின் உரிமையாளர் திரு. சுப்பிரமணியத்தின் புதல்வியு மான செல்வி வள்ளியம்மை என்ற புவனேஸ்வரி, B.A.,க்கும் கடியாபட்டி இராமச்சந்திரபுரம் தீ. சொ. முரு சுப. அரு. சுப் பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகப்பன் D.M.E. க்கும் மதகுபட்டியில் 20-4-89 அன்று திருமணம் சிறப் பாக நடைபெற்றது.

திருமண விழாவில் திரு. சொ. சுப்பிரமணியம் வரவேற்றுப் பேச எவர்பிரைட் திரு. நாச்சியப்ப செட்டியாரும் 'பொற்கிழிக் கவிஞர்' பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரமும் வாழ்த் துரை வழங்கினார்கள்.

மணிவிழா

ஒக்கூர் ஆ. கரு. ஆத. மாத வன் செட்டியார் - திருமதி விசா லாட்சி ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 31-3-89 அன்று ஒக்கூரில் சிறப்பாக நிகழ்ந்தது.

மணிவிழாவையொட்டி முதல் நாள் மாலை மதுரை சகோதரி கள் செல்வி எஸ். மீனாட்சி செல்வி எஸ். பார்வதியின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

31-3-89 காலை 7 மணிக்கு திரு. டி. எம். விஸ்வலிங்கம் சபாபதி சகோதரர்கள் மற்றும் திரு. எஸ். இராமலிங்க தேசிக ரின் திருமுறை இசையும் 10-30 மணிக்கு 'திருமுறைக் காவலர்' பாகனேரி திரு. இராம. முத்துப் பழநியப்பச் செட்டியார். அவர் கள் தலைமையில் புலவர் திரு. நீ. சீ. சுந்தரராமன், 'பொற் கிழிக் கவிஞர்' திரு. சொ. சொ. மீ. சுந்தரம், புலவர் திரு தா. குருசாமி தேசிகர், திருமதி முத்து மீனாள் ஆகியோர் பங்கேற்ற திருமுறை விழா வாழ்த்தரங்க மும் சிறப்பாகநிகழ்ந்தன 'நகரத் தார் குரல்' இதழின் துணை ஆசி ரியர் திரு. எல். சுந்தரம் நன்றி கூறினார்.

திருமணம்

பி. அளகாபுரி ராம. மு. சோம. முத்தப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கலா என்ற அழகம்மை B.Com.,க்கும் நற்சாந்துபட்டி பெ. ராம ராம. சித. இராமன் செட்டியார் அவர் கள் புதல்வன் செல்வன் காசி என்ற சிதம்பரம் B.Com.,(C.A) க்கும் 9-2-89 அன்று பி. அளகா புரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பாவலர் வள்ளியப்பா புகழ் வாழ்க!

கவிஞர் செல்லகணபதி, எம்.ஏ.,

அழுகின்ற பிள்ளை ராகம்
அமர்த்திட வேண்டும் என்றால்
அழ வள்ளி யப்பா பாட்டு
அருமருந் தான தென்றார்
அழ வள்ளி யப்பா வாழ்வே
அடியோடு சாய்ந்த தென்றால்
அழுகின்ற நண்பர் தம்மை
யார் வந்து தேற்று வாரோ.

இவர்புகழ் அறிந்த போதும்
இவர் முகம் பார்க்கா தார்கள்
இவர்தனை நேரில் கண்டால்
இவர்தானா வள்ளி யப்பா
இவரன்றோ எளிமைக் கென்றும்
இலக்கணம் ஆனார் என்றார்
இவரன்பால் யாரோ டென்றும்
இணையாகப் பழகி வாழ்ந்தார்.

அவர்பெற்ற புகழும் கூட
அவர்காட்டும் எளிமைக் கீடோ
அவர் பெற்ற பதவி பார்த்தால்
அடங்குமோ எண்ணிக் கைக்குள்
அவர்நெஞ்சில் அதனை யெல்லாம்
ஆஸ்தியாய்க் கருத வில்லை
அவர் வாழ்ந்த வாழ்வில் நட்பை
அரியபொக் கிஷமாய்க் காத்தார்.

விருத்தப்பா கலிப்பா வெண்பா
விளங்குநல் ஆசிரி யப்பா
உறுத்தப்பா தமிழ்ப்பாட் டிற்கு
உரியதாம் குழந்தைப் பாட்டோ
உண்டென்று சொல்லும் வண்ணம்
அரியபுத் திலக்கி யத்தை
ஆக்கினார் வளர்த்தார் காத்தார்.

தான்மட்டும் கவிஞ னாகத்
தழைத்திட விருப்பம் இல்லை
தன்போன்று பிறரும் பாடத்
தகுந்தநல் ஆசா னானார்
வான்முட்டும் புகழே யார்க்கும்
வாய்த்திடக் கண்டு போற்றி
தேன்சொட்டும் வாழ்த்துச் சொல்வார்
திகழ்பொ றாமைதான் இல்லை.

பலரொன்று சேரும் போது
பயனுள்ள இயக்க மாகும்
சிலபேர்கள் தனித்து நின்றே
செய்கின்ற செயல்கள் கூடப்
பலமுள்ள இயக்க மாகும்
பாவலர் வள்ளி யப்பா
பலகாலம் தன்செல் வாக்கால்
பணி செய்யும் இயக்க மானார்.

குழந்தைக்கு எழுது வோரைக்
கூட்டினார் சங்கம் செய்தார்
அழ வள்ளி யப்பா தானே
அமைப்புக்குத் தலைவர் தொண்டர்
வளமான கதைபாட் டெல்லாம்
வடிப்பதில் பேர்பெற் றோர்க்கு
வழங்கினார் கேட யங்கள்
வாழ்த்தினார் கூட்டம் போட்டு.

குழந்தைக்கு மட்டு மேநான்
கொஞ்சிடும் தமிழைச் சொல்வேன்
குழந்தைகள் மட்டு மேஎன்
குறியிடம் அவர்பால் அன்பை
வழங்குவேன் என்று நாளும்
வாழ்ந்ததால் இவர்மட் டும்தான்
குழந்தைக்குக் கவிஞ ரானார்
கொஞ்சமோ இவர்பே ராற்றல்.

இவர் சொன்ன பாடல் நெஞ்சில்
இருப்பதால் என்றென் றைக்கும்
இவர்சாவ தில்லை நாளும்
இவர் புகழ் நிலைத்தி ருக்கும்
இவர் வாழ்ந்து முடிந்த போதும்
இவர் வார்த்தை மடிவ தில்லை
இவர் புகழ் வாழ்க ஈரேழ்
தலைமுறைக் காலம் வாழ்க.

முத்தம்மாவும் வள்ளியம்மாவும்

குழந்தைகளுக்காகப் பாடல்கள் எழுதுவது என்பது ஒரு சிலராலேயே முடியும். குழந்தைகளுக்குப் பிடித்தமான, அவர்கள் புரிந்து கொள்ளும்படியான கவிதைகளை எழுதுவதில் வல்லவர், திரு. அழ. வள்ளியப்பா அவர்கள், இளமைக்காலத்திலிருந்தே குழந்தைகளுக்காகப் பாடல்களை எழுதி பலரது பாராட்டுதல்களையும விருதுகளையும் பெற்றவர், திரு வள்ளியப்பா. இளமைக் காலத்தில் அவர் திரு. கண்ணதாசனிடம் நட்புக் கொண்டிருந்தார். இருவருக்கும் கடிதப் போக்குவரத்து உண்டு. இருவரும் வேடிக்கையாக எழுதிக் கொள்வார்கள். கண்ணதாசனின் இயற் பெயர் ஏஎல். எஸ். முத்தையா என்பதாகும், 'கண்ணதாசன்' என்பது பன்மொழிப் புலவர் அவருக்குச் சூட்டிய பெயராகும். அக்காலத்தில் திராவிடக் கழகத்தில் அபிமானம் கொண்டிருந்ததால் அவர் அப்பெயரை விரும்பாத போதிலும், பன்மொழிப் புலவர் சொல்லிய விளக்கங்களைக் கேட்டு ஒப்புக்கொண்டார். அவர் திரு. வள்ளியப்பாவுக்கு எழுதும் கடிதங்களில் 'அன்புள்ள வள்ளியம்மா!' என்று எழுதுவார். அதுபோல் திரு வள்ளியப்பா, கண்ணதாசனுக்கு எழுதும் கடிதங்களில் 'அன்புள்ள முத்தம்மா!' என்று எழுதுவார். கண்ணதாசன் தொடக்கத்தில் "திருமகள்" பத்திரிகையில் பணிபுரிந்தபோது கதைகள், கட்டுரைகள் மட்டுமே எழுதி வந்தார். என் போன்றோர் பாடல்கள் எழுதுவதைக் கண்ணுற்று அவரும பாடல்கள் எழுத ஆர்வம் கொண்டு, ஆச்சிமார்கள் கூறும் தாலாட்டுப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்களைப் பின்னணியாக வைத்துக் கட்டுரைகள் எழுதினர். அதன் பிறகுதான் சென்னைக்கு வந்து அவரது அண்ணன் திரு. ஏஎல். சீனிவாசனை அணுகி திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதத் தொடங்கினர். திரைப் படங்களுக்குப் பாடல்கள் எழுதுவதென்பது ஒருசிலரால்தான் முடியும். எதுகை மோனை, சீர் தளை முதலியவற்றை முக்கியமாகக் கொண்டு கவிதைகள் எழுதப்பெறுகின்றன. இந்த முறைகள் திரைப் படப் பாடல்களுக்கு ஒத்துவருவதில்லை. பின்னணி இசைக்கு ஏற்றவாறு பாடல்கள் அமையப் பெற வேண்டும். எதுகையைத் தேட வேண்டியதில்லை. ஒரு நூலைப் படித்தால் அதன் சாரத்தை நொடியில் உணரவல்ல கண்ணதாசன் பொருள் பொதிந்த திரைப்படப் பாடல்களை எழுதுவதில் வல்லவர். என்றும் மறக்க முடியாத சொல்நயம், வாக்குச் சுத்தத்துடன் தமிழிசை மழை பொழிந்த 'இசையணி' சீர்காழி கோவிந்தராசன் பாடுவதற்கு கவியரசு கண்ணதாசன் எழுதிய பாடலில் மாதிரிக்காகச் சில வரிகள்:-

அன்னையின் அருளே வா வா
ஆடிப் பெருக்கே வா வா
குடகில் ஊற்றுக் கண்ணுகி
குலத்தைக் காக்கும்
பெண்ணுகி
கண்ணம்பாடி அணை தாண்டி
கார்முகில் வண்ணனை
வலம்வந்து
திருவாய் மொழியாம்
நாலாயிரம்
தேனய் பெருகும்
தமிழே வா! (அன்னை)

திரு. வள்ளியப்பா குழந்தைகளுக்கான பாடல்களை எழுதுவதில் வல்லவராகத் திகழ்ந்தமாதிரி கண்ணதாசன் திரைப்படப் பாடல்கள் எழுதுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இரு நண்பர்களும் மறைந்துவிட்ட போதிலும் அவர்களது பெயரும் புகழும், தமிழ் மக்கள் உள்ளத்தைவிட்டு நீங்காது நிலைத்து நிற்கும்.

—வி. வெ. சொக்கலிங்கம்
(ஒளி வைரம்)

குழந்தைக் கவிஞருக்கு அஞ்சலி

—செ. செல்லப்பன்—

குழந்தை உள்ளம் கொண்ட 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்களின் இழப்பு, குழந்தை இலக்கியத் துறைக்கு ஈடுகட்டமுடியாத பேரிழப்பு ஆகும். அவர் குழந்தைகளோடு குழந்தையாக ஆடிப் பாடி மகிழ்ந்தும் நண்பர்களோடு கலகலப்பாகப் பேசியும் 67 வயதிலும் இளமை குன்றாது இருந்தார். அவர் கடைசி மூச்சு உள்ளவரை தமிழ்ப் பணியிலும் பொதுநலத் தொண்டிலும் ஆர்வம் காட்டினார்.

அவரும் நானும் பள்ளித் தோழர்கள்; பின் நண்பர்கள். இராயவரத்தில் உள்ள சு. கதி. காந்தி பாடசாலையில், தான் தொடக்கக் கல்வி கற்றதை அவர் பெருமையோடு கூறியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அப்போது ஆங்கிலேயர் ஆட்சிக் காலம். பாரதியாரின் பாடல்களை எல்லாம் அப்பள்ளியில் சொல்லிக் கொடுத்து வந்ததினால் ஆட்சியாளர்களின் சீற்றத்திற்கு அப்பள்ளி ஆளானது. அப்போது திரு. வள்ளியப்பாவுக்குத் தேசியக் கனல் உண்மையிலேயே ஏற்பட்டது.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்குப் பிறகு தமிழ்நாட்டில் குழந்தை இலக்கியத்தில் ஆர்வம் காட்டி அதனைச் செழுமைப் படுத்தி குழந்தைகளுக்காக பல நூல்களை எழுதி வெளியிட்டவர் அவர். அவரால் உருவாக்கப் பெற்ற குழந்தைக் கவிஞர்கள் இன்று நாட்டில் ஏராளமாக இருக்கின்றார்கள்.

தொடக்ககாலத்தில் ''சக்தி'' வை. கோவிந்தன் கொடுத்த உற்சாகத்தாலும் திரு. எஸ். எம். பழநியப்ப செட்டியார் போன்ற நண்பர்கள் அளித்த உதவியாலும் அவர் குழந்தை இலக்கியத்திற்கு அருந்தொண்டாற்ற முடிந்தது. வாழ்க்கைக்கு வங்கிப் பணியை மேற்கொண்டாலும் அதிலும் படிப்படிப்பாக உயர்ந்து மண்டல மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஆனால் குழந்தை இலக்கியப் பணியிலிருந்து அவர் என்றுமே ஓய்வு பெறவில்லை.

தென்னிந்திய மொழி புத்தக டிரஸ்ட்டில் பல ஆண்டுக் காலம் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பொறுப்பில் இருந்த அவர். தமிழ் நூல்கள் பல்லாயிரக் கணக்கான பிரதிகள் குறைந்த விலையில் கிடைக்கக் காரணமாக இருந்தார்.

எண்ணிலடங்கா நண்பர்களை அவர் பெற்றிருந்தார் எல்லா வற்றிற்கும் மேலாக அவர் மொழிப் பற்று, நாட்டுப் பற்று மிக்க ஒரு தேசியவாதியாகத் திகழ்ந்தார்.

அவர் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் ஏனைய தமிழ் உள்ளங்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். குழந்தைக் கவிஞரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

(குழந்தைக் கவிஞரின் பிரிவை ஒட்டி மதுரை வானொலி நிலையம் ஒலிபரப்பிய அஞ்சலி நிகழ்ச்சியின் சுருக்கம் இது)

உண்மை நிகழ்ச்சி

இது 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உண்மை நிகழ்ச்சி!

நம்மவர்கள் அப்போதெல்லாம் கணக்குகளிலும் சரி கடிதங்களிலும் சரி எண்களைத் தமிழ் வடிவத்தில் தான் எழுதுவார்கள்.

இரங்கூனில் மோல்மேன் என்ற இடத்தில் இருந்து ஒரு முதலாளி இரங்கூன் நகரில் இருந்த தனது கடை ஏஜண்டுக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினர்;

> மன்மத ௵ தை ௴ ௰ ௳ (10௳) ....
> எழுதிக் கொண்டது இப்பவும் நானும் ௰ ௮ ௳
> அங்கு வருகிறேன். தாங்களும் எலுமிச்சம்பழம் அம்
> பிட்டால் பழம் ருயம் வாங்கி வைக்க வேண்டியது.
>
> வேணும்

இரங்கூனில் இருந்த கடை ஏஜண்டும் எலுமிச்சம்பழம் 8 வாங்கி வந்து விட்டார். கடித வாசகப்படி பிட்டால் பழம் 50 வாங்குவதற்கு பிட்டால் பழம் என்னவென்று தெரியாமல் தவித்தார். இரங்கூனில் இருந்த சீனக்காரர்கள், பர்மாக்காரர்கள் உள்ளிட்ட பழக்கடை வைத்திருந்த அத்தனை பேரிடமும் விசாரித்து விட்டார். பிட்டால் பழம் பற்றி ஏதும் தெரிந்து கொள்ள முடியவில்லை. முதலாளி குறிப்பிட்ட நாளில் வந்தார். அவரிடம் ஏஜண்டு ''முதலாளி உங்கள் கடிதம் வந்தது. அதன்படி எலுமிச்சம்பழம் வாங்கி வைத்து விட்டேன். பிட்டால் பழம் மட்டும் வாங்கவில்லை. அது என்னவென்றே இங்கு யாருக்கும் தெரியவில்லை.'' என்ருர். முதலாளிக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னுடைய கடிதத்தைக் கொண்டு வரச் சொல்லிப் பார்த்தார். பிறகு ஏஜண்டுக்கு விளக்கினர். ''எலுமிச்சம்பழம் அம்பிட்டால் 50 வாங்கி வைக்கவும்' என்று தான் நான் எழுதியிருக்கிறேன். அம்பிட்டால் என்பதற்கு கிடைத்தால் என்பது பொருள். நீங்கள் அம்பிட்டால் என்பதைப் பிரித்துப் பொருள் கொண்டு விட்டீர்கள். அதனுல் தான் இத்தனை சிரமங்கள் ஏற்பட்டுள்ளன'' என்ருர்.

— இராம. அருணகிரி
நாட்டரசன்கோட்டை

திருமணம்

பி. அழகாபுரி ராம. மு. சோம. முத்தப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கலா என்ற அழகம்மை B. Com., க்கும் நற்சாந்துபட்டி பெ. ராம. ராம. சித. இராமன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் காசி என்ற சிதம்பரம் B. Com ,(C.A.) க்கும் 9-2-89 அன்று பி. அழகாபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



வண்ண நிலா நீ சிரிக்க!....

கவிஞர் கரு. கருப்பையா, பி எஸ்ஸி.,
கண்டரமாணிக்கம்

அன்னமே ஆரமுதே
அழகுமலர்ப் பூச்சரமே
கன்னல் கனிச்சாறே
கற்கண்டுத் தேன்ரசமே
வண்ண மணிக்கிளியே
வாகான பூங்குயிலே
எண்ணமெலாம் இனிக்கவந்தாய்
எங்குலத்துச் சித்திரமே
கனகமணிப் பூச்சூடி
கண்மணியே கண்வளராய்!
வளமான மாமதுரை
வளர்மீனாள் அழகிதுவோ...
நலமான சொக்கேசர்
நயங்காணும் பூவுரையோ!
பொன்னார் மேனியனின்
புதுஅழகோ பூநிலவோ!
மன்னவரின் குலத்தினிலே
மகிழ்வுதர வந்தவரோ...
வட்டநிலா வந்துநிற்க
வண்ணநிலா நீசிரிக்க
புத்தம்புதுப் பட்டோ...
பூவிரியும் சொற்செட்டோ...
செந்தமிழே கண்வளராய்!
செங்கரும்பே கண்வளராய்!

பாராட்டுகிறோம்

தேவகோட்டையைச் சேர்ந்த வழக்குரைஞர் திரு. அரு. லெட்சுமணன் சென்னை உயர்நீதி மன்றத்தின் அரசு வழக்குரைஞராக நியமனம் செய்யப் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. அரு. லெட்சுமணன் 47 வயதுடையவர். பி. ஏ. பி. எல். படித்தவர். சென்னை உயர் நீதி மன்றத்தில் கடந்த 21 ஆண்டுகளாக வழக்குரைஞராக இருந்து வருகிறார். இவர் கனரா வங்கி, மதுரை வங்கி, பாங்க் ஆப் தஞ்சாவூர், கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க் ஆகியவற்றின் சட்ட ஆலோசகராவார்.



சென்னை உயர் நீதிமன்ற பார் அசோஷியேஷன், தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளி தேவகோட்டை முன்னாள் மாணவர்கள் அசோஷியேஷன் ஆகியவற்றின் செயலாளர். சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் இணைச் செயலாளர். சென்னை நகரத்தார் மாணவர் சங்கம், இரணியூர்க் கோவில் நகரத்தார் நித்திய கட்டளை பூஜை ஆகியவற்றின் அறங்காவலர். அவருக்கு நமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதுமை

நாட்டரசன்கோட்டை கண' க. சொ. கண. சொக்கலிங்கம் என்ற முருகப்ப செட்டியார் அவர்கள் பேரனும் திரு. சொக்கலிங்கத்தின் புதல்வனுமான செல்வன் கண்ணப்பனுக்கு 24-3-89 அன்று நாட்டரசன் கோட்டையில் காப்புக் கட்டுப் புதுமை சிறப்பாக நடைபெற்றது.

விழுப்புரம் சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்வு

விழுப்புரம் நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 2-4-89 அன்று நா. இலட்சுமணன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ. ஆர். மெய்யப்பன் அனைவரையும் வரவேற்றார். திரு. கே. ஆர். இராமநாதன் செட்டியார் ஆண்டறிக்கை வாசித்தார். ஆடிட்டர் திரு. தி. பழநியப்பன் வரவு-செலவுக் கணக்குகளை வாசித்தார். 1989-90ம் நிதியாண்டிற்கு திருவாளர்கள் ஆர் எம். முத்தப்ப செட்டியார் கௌரவத் தலைவராகவும் நா. இலட்சுமணன் செட்டியார் தலைவராகவும், கேஆர். இராமநாதன் செட்டியார் துணைத் தலைவராகவும், ஏ. ஆர். மெய்யப்பன் செயலராகவும், கே. ஆர். சின்னையா செட்டியார் இணைச் செயலராகவும், எல். ஆர். எம். முத்துக் கருப்பன் செட்டியார் பொருளாளராகவும் மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் மறைவிற்கு இரங்கல் தீர்மானமும், விழுப்புரம் கணபதி நகரில் சங்கக் கட்டிடத்தை நன்கொடைகள் பெற்றுக் கட்டுவது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. திரு. கே. ஆர். சின்னையா செட்டியார் நன்றி கூறினார்.

பொன்னம்பல சுவாமிகள் மடாலயம்

ஆடகப் பொதுவில் நாடகம் இயற்றும் ஏடவிழ் கூந்தல் இறைவி பாகனும் நடராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சிதம்பரத்தில் அமைந்துள்ளது. பொன்னம்பல சுவாமிகள் மடாலயம். இது கோவிலூர் ஆதீனத்திற்கு உட்பட்ட மடமாகும். இதைத் தோற்றுவித்தவர்கள் தவத்திரு பொன்னம்பல சுவாமிகள் கோவிலூர் ஆதீனகர்த்தராக இருந்த கருணாநிதி சுவாமிகள் என்ற தவத்திரு சிதம்பர ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் பொன்னம்பல சுவாமிகளின் குருநாதர் ஆவார்கள். கருணாநிதி சுவாமிகளின் பாதுகையை வைத்-து வணங்கி இந்த மடத்தைத் தோற்றுவித்தார்கள் பொன்னம்பல சுவாமிகள். பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்தில் பொன்னம்பல சுவாமிகள் சிவலிங்க வடிவிலும் இரண்டாவது பட்டமாகிய தவத்திரு காசிவாசி சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் நந்தி வடிவிலும் காட்சி தந்து, வழிபடும் அடியார்களுக்கு இன்னருள் புரிந்து வருகிறார்கள்.

தவத்திரு பொன்னம்பல சுவாமிகள் ஞானநூல் பல கற்றவர்கள். சமஸ்கிருதம், இந்தி ஆகிய இருமொழிகளும் அறிந்தவர்கள். அடியார்க்கெல்லாம் மெஞ்ஞானத்தை அன்புடன் போதித்தவர்கள். கீதை, கைவல்யம் முதலான பல நூல்களுக்கு உரை எழுதியவர்கள். நகரத்தார்கள் சிதம்பரத்தில் வேத பாடசாலைகள், நந்தவனங்கள், பசு மடங்கள் முதலியுவைகளைக் கட்டுவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள். சிதம்பரத்தில் இளமை ஆக்கினார் கோயில் மிகவும்

பழுதுற்று இருந்தது, அதைப் புதுப்பித்துக் கட்டும்படி காரைக்குடியைச் சேர்ந்த பொய்சொல்லார் வீட்டு பெரி. க. சின்னையா செட்டியார் அவர்களிடம் சுவாமிகள் கூறினார்கள். அவர்கள் ஆணையை ஏற்று சின்னையா செட்டியார் அவர்கள் இளமை ஆக்கினார் கோவிலைப் புதுப்பித்தார்கள். சுவாமிகளின் ஆணையின்படி சிதம்பரம் அருகே எறும்பூரில் தத்வராய சுவாமிகள் சமாதிக்கு பெரிய மடாலயம் ஒன்றை உ. சிறுவயல் சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் கட்டினார்கள்.

பொன்னம்பல சுவாமிகள் காலத்திற்குப் பின் பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்தில் இரண்டாவதாகப் பட்டத்திற்கு வந்தவர்கள் தவத்திரு காசிவாசி சிதம்பர ஞான தேசிக சுவாமிகள். இவர்கள் சிறந்த தமிழறிஞரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான காரைக்குடி அள. சித. சொ. தேவராஜன் செட்டியார் அவர்களின் பாட்டனார் ஆவார்கள். காசிவாசி சுவாமிகள் ஞான நூல் பல கற்றவர்கள். வேதாந்த சாத்திரங்களை அடியார்களுக்கு போதித்தவர்கள். இவர்கள் ஆட்சிக் காலத்தில் மடத்தை நன்கு விரிவுபடுத்தி மடத்திற்குச் சொந்தமாக ஏராளமான நில புலன்கள் வாங்கி வைத்தார்கள். காசிவாசி சுவாமிகளுக்கு நிறைய சீடர்கள் இருந்தார்கள். அவர்களுள் தலை மாணாக்கராகத் திகழ்ந்தவர்கள் தவத்திரு பரஞ்சோதி சுவாமிகள்.

தற்சமயம் கோவிலூர் ஆதீன கர்த்தர் மகா சந்நிதானம் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிகசுவாமிகளின் சீரிய தலைமையில் பொன்னம்பல சுவாமிகள் மடாலயம் நன்கு இயங்கி வருகிறது. ஏழைச் சிறுவர்கள் சிலர் மடத்தில் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள். அவர்களுக்கு உணவு உடை அளிக்கப் பெறுகிறது. படிப்புச் செலவுக்குப் பணமும் வழங்கப் பெறுகிறது. அவர்களுக்குத் தேவாரம், திருவாசகம் போன்றவை கற்பிக்கப் பெறுகின்றன. வியாழன் இரவு தோறும் மடத்தில் வார வழிபாடு இனிது நடைபெற்று வருகிறது. சிதம்பரம் செல்லும் நகரத்தார்கள் மடத்தில் தங்கிச் செல்கிறார்கள். பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்திற்கு 1927ம் ஆண்டுவாகில் மகாத்மா காந்தியடிகள் வருகை தந்திருப்பது சிறப்புக்குரியது. ஆண்டுதோறும் தீபாவளி தினத்தன்று பொன்னம்பல சுவாமிகளுக்குக் குருபூஜையும் தைமாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று காசிவாசி சிதம்பர ஞான தேசிக சுவாமிகளுக்குக் குருபூஜையும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

- அள. சித. சொ. தெ.
சொக்கலிங்கம்
காரைக்குடி.

முனைவர் வ. சுப. மாணிக்கனார் மறைவு

தமிழறிஞரும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் தமது 73ஆவது வயதில் 24-4-89 அன்று பாண்டிச்சேரியில் மாரடைப்பால் காலமானார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


தகவல் அறிந்ததும் புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு பரூக் அவர்களும் புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வேங்கட சுப்பிரமணியம் அவர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

முனைவர் வ. சுப. மாணிக்கனாரின் பூத உடலைப் புதுவை அரசு காரைக்குடிக்கு அனுப்பி வைத்தது. காரைக்குடியில் அவரது வீட்டில் அவரது உடலுக்குப் பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

26-4-89 புதன் மாலை 3-00 மணி அளவில் அவரது 'கதிரகம்' இல்லத்தில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. பின்னர் மாலை 4-00 மணி அளவில் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. கழனி வாசல் இடுகாட்டில் உடல் தகனம் நடந்தது. சிதைக்கு அவரது மூத்த மகன் திரு. தொல்காப்பியன் தீ மூட்டினார்.

இரங்கற் கூட்டம்

இரங்கற் கூட்டத்தில் திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்கள் திரு. எம். லெட்சுமணன் (மதுரை - காமராசர்), திருமதி இராதா தியாகராசன் (காரைக்குடி-அழகப்பா). திரு. முத்துக்குமரன் (திருச்சி-பாரதிதாசன்), திரு அகஸ்தியலிங்கம் (தஞ்சை-தமிழ்), அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் திரு ஆறு. அழகப்பன், புதுவைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு. க. ப. அறவாணன், காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வர் திரு. செல்வகணபதி, தமிழ் எழுத்தாளர் மன்றத்தைச் சேர்ந்த புலவர் திரு இரா. இளங்குமரன், அரசு தமிழ்த்துறைத் தலைவர் திரு. சிலம்பொலி செல்லப்பன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பழமலை உட்பட பலர் மாணிக்கனாரின் தமிழ். இலக்கியத் தொண்டுகளைப் பாராட்டிப் புகழஞ்சலி செலுத்தினர்.



அஞ்சலி

தமிழக முதல்வர் சார்பில் தேவர் திருமகன் ஆட்சித் தலைவர் திரு.பழமலை காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் திரைப்பட இயக்குநருமான திரு. இராம நாராயணன், காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு சித சிதம்பரம் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மற்றும் மதுரை நகரத்தார் சங்கத்



1955ஆம் ஆண்டு காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற கலை விழாவின்போது (அமர்ந்திருப்போர் - இடமிருந்து வலமாக) திருவாளர்கள் ஈ. வெ கி சம்பத், பேராசிரியர் க. அன்பழகன் பேரறிஞர் அண்ணா, ஏ. என். தம்பி (அழகப்பா கல்லூரி முதல்வர்) முனைவர் வ. சுப. மாணிக்கனார், கவியரசர் கண்ணதாசன் மற்றும் மாணவர்கள்.

தின் சார்பாக அதன் துணைத் தலைவர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் திரு. எல். என். லெட்சுமணன் முனைவர் திரு. தமிழண்ணல் பேராசிரியர் திரு. செச. சொ. மீ. சுந்தரம் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

வாழ்க்கைக் குறிப்பு

முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் மேலைச்சிவபுரியில் பிறந்தவர்கள், வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர்கள் இவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து எம். ஏ., பட்டம் பெற்றவர்கள். (பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் மாணவர்) அடுத்து M O L. பட்டமும் 'தமிழ்க் காதல்' என்ற ஆராய்ச்சி நூல் மூலம் முனைவர் பட்டமும் பெற்றவர்கள்.

இவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் முதல்வராகவும் பணியாற்றினார்கள். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்கள். அதன் பின் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்கள். இவர்களது பதவிக் காலத்தில் அங்கு தமிழியல் துறை, கம்ப்யூட்டர் துறை உட்பட பல புதிய பிரிவுகள் உருவாயின. இவர் எழுதிய பல்வேறு நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக உள்ளன.

பிற செயல்கள்

பண்டிதமணியின் நூற்றாண்டு விழாவையொட்டி பண்டிதமணி எழுதிய நூல்களையும் பண்டிதமணி பற்றிய நூல்களையும்

வெளியிட வ சுப. மாணிக்கனார் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

முதல் வகுப்பிலிருந்து கல்லூரிப் படிப்புமுடிய தமிழ், பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று தமிழ் வழிக் கல்வி இயக்ககத்தைத் தொடங்கி அதற்காக ஊ வலங்கள் நடத்தி அதைத் தம் வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். அதை நிறைவேற்றுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை இவர்கள் ஆதரிக்கவில்லை. அதை ஆதரித்தால் பழம் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவு குறைந்துபோய் நாளடைவில் தமிழ் தொடர்பு அற்றுப் போய் விடும் என்று வாதிட்டு எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள்.

மாணிக்கனார் அவர்கள் எளிமையானவர்கள்; சிக்கனமானவர்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக பொய்சொல்லா மெய்யர் ஆவார்கள். 'பொய் சொல்லா மாணிக்கம்' என்ற அடையாளப் பெயரும் இவர்களுக்கு உண்டு.

இவர்கள் தமிழகப் புலவர் குழுவின் தலைவராகவும் காரைக்குடி தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து வந்தார்கள். தொல்காப்பியம் பற்றி ஆய்வு செய்து வந்தார்கள். அது ஏறத்தாழ முடியும் தருவாயில் உள்ளது.

குடும்பம்

வ. சுப. மாணிக்கனார் அவர்களுக்கு மனைவி திருமதி ஏகம்மை ஆச்சியும் திரு. தொல்காப்பியன், B. E. திரு. பூங்குன்றன் M Sc. திரு பாரி B Com என மூன்று புதல்வர்களும் தென்றல், மாதரி, பொற்கொடி என மூன்று புதல்விகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. திரு. தொல்காப்பியன் சென்னை கார்போரண்டம் யுனிவர்ஸல் நிறுவனத்திலும், திரு. பூங்குன்றன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் திரு. பாரி மதுரை வங்கியிலும் பணியாற்றி வருகின்றனர்.

அனுதாபம்

மாணிக்கனாரின் மறைவு குறித்துத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன், தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் உள்பட ஏராளமானவர்கள் அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளனர்.

நகரத்தார் சிந்தனைக்கு

டாக்டர் வ. சுப. மாணிக்கனார்

நாட்டுக்கோட்டை நகரத்தார் குலம் மூவேந்தர் காலந் தொட்டுத் தொன்மையானது; தமிழகத்தும் இந்தியா முழுவதும் கடல் கடந்தும் வாணிகம் போலத் தொண்டும் செய்தது; தமிழ் மொழிக்கும் தமிழர் சமயங்கட்கும் வழி வழி காப்பளித்தது; குமரி முதல் இமயம்வரை தெய்வத் திருப்பணி கண்டது. அயல் நாடுகளில் சோழர்கள் போலத் தமிழ் நாகரிகத்தைப் பரப்பியது; எல்லா இனமும் எல்லா மதமும் எல்லா மொழியும் எல்லா நாடும் வாழுமாறு அருப்பெருங்கொடை செய்த பொது நோக்குடையது. காலத்திற்பேற்ப, தனிப் பல்கலைக் கழகம், கல்லூரி பள்ளிகளும், நூலாலை, தொழிற்சாலைகளும் நிறுவி வருவது. சூழ்நிலைகள் எவ்வளவு எதிர்ப்பாக இருந்தாலும் பொருளீட்டுவதில் குன்று முயற்சியும் அருளீட்டுவதில் குறையா முனைப்பும் உடையது. திருப்பணிக்கும் தமிழ்ப் பணிக்கும் தனி வரலாறு வரையும் அளவுக்குக் கொடை வளம் செய்த வண் புகழுடையது. தனக்கெனச் சிறிதும் பிறர்க்கெனப் பெரிதும் வாழ்ந்த ஒரு குலம் தமிழகத்தில் வேறு உண்டா?

இத் தனி வணிகக் குலம் இன்று முன்னேறுவது போலத் தோன்றினும் தீய போக்குகள் சமூகத்தில் தலையெடுத்து விட்டன. படு வீழ்ச்சிப் பாதையில் சமூகம் ஓடிக்கொண்டிருக்கின்றது. புள்ளி தோறும் வறுமை புகுந்து விட்டது; குடியிருந்த ஊர்கள் குறைந்து விட்டன. படியிருந்த வீடுகள் இடிபட்டன - கன்னியர்கள் மூத்துக் கண்கலங்குகின்றனர். பெண் பெற்றோர்கள் கவலைக் கடலில் நீந்துகின்றனர். குமரிப் பெருக்கம் குலத்தைக் குறைக்கின்றது.

எளிய திருமணத்தால் புள்ளிகளும் பெருக வேண்டும். பரந்த தொழில் வளத்தால் புள்ளிதோறும் பொருள் வளமும் பெருக வேண்டும். சிறிய மனைகளால் ஊர் செழிக்க வேண்டும். வருங்கால இளைஞர்களும் இளைஞிகளும் இக்குலத்துப் பிறப்பை நன்கு மதிக்க வேண்டும். இவற்றுககு என்ன வேண்டும்? சமூகப் போக்கு அழிபோக்காகக் கூடாது: சடங்குச் செலவு முறைகள் உயிர்ச் சுமையாகக் கூடாது. இனிமையும் எளிமையுமே சமூகப் புள்ளிகளை வாழ்விக்கும். இதுவே நகரத்தார்க்கு வழி வழி முன்னேற்றம் தரும். நன்றி : ''நகரத்தார்''

இயற்கை எய்தினர்

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த லெ. மாணிக்கஞ் செட்டியார் அவர்கள் தமது 74-ஆவது வயதில் சிங்கப்பூரில் 19-4-89 அன்று இயற்கை எய்தினர்கள்.

வட்டித் தொழில் செய்து வந்த இவர்கள் இறை நம்பிக்கையுடையவர்கள். எதையும் சொன்னபடி செய்வார்கள்; நடப்பார்கள்.

இவர்கள் துணையார் திருமதி மீனாட்சி ஆச்சி அவர்கள் 1978 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சதுர்த்தசி திதியில் இயற்கை எய்தினர்கள். அதே மாதம் அதே திதியில் இவர்களும் இயற்கை எய்தியது குறிப்பிடத்தக்கதாகும்.



தோற்றம் :
29-6-1915

மறைவு :
19-4-1989

நாட்டரசன்கோட்டை

திரு. லெ. மா. மாணிக்கம் செட்டியாரவர்களுக்கு

''கண்ணீர் அஞ்சலி''

அன்றொரு நாள் அயல்நாடு செல்லும் பொழுது
அன்பாக ஆசியுரை பகன்று சென்றீர்!
சென்றவரோ திரும்பிடாமல் சிவனடி சேர்ந்தீர்
செகமெலாம் போற்றிடவோ வாழ்வாங்கு வாழ்ந்தீர்!
உன்மத்தம் பிடித்ததுபோல் அதிர்ச்சி யானேம்
உம்அன்பு உம்சேவை போற்ற லானேம்!
இன்முகமாய் ஈவதிலோர் இன்பம் காணும்
இனியவரே இனிஉம்மை என்று காண்போம்?

அன்புள்ள

மகன்கள்:

லெ. மா. தியாகராசன் வள்ளியம்மை

லெ. மா. மகாதேவன் சிவகாமி

மகள்கள்:

சொ. தெய்வானை சொக்கலிங்கம்

சித. தேவகி சிதம்பரம்

மற்றும் பேரன், பேத்தியர்
நாட்டரசன்கோட்டை

அஞ்சலி ஆக்கம்: குப. சொக்கலிங்கம் (மருமகன்)
நாட்டரசன்கோட்டை

மறைந்த மாணிக்கம்

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

தமிழ்த்தோட்டத்தில் இருந்த தென்னைமரம் சாய்ந்து விட்டதே என்று தமிழ் உலகம் வருந்திக் கொண்டிருக்கும்போது பக்கத்தில் இருந்த ஆலமரமும் திடீரென்று சாய்ந்து விட்டது. பின்னைத் தமிழ் வளர்த்த வள்ளியப்பா அவர்கள் மறைந்த செய்தி மனத்தை வருத்திக் கொண்டிருக்கும் போதே பெருந்தமிழ் வளர்த்த வ. சுப. மாணிக்கனார் அவர்கள் மறைந்து விட்டார்கள். ஆம். பொய்யிலாப் புலவர் ஆகப் பொன்னொளி விரித்த செம்மல் கையறு நிலையில் பாடக் கருப்பொருள் ஆகி விட்டார். அண்ணாமலையில் பூத்து அழகப்பரிடம் காய்த்து மதுரையில் பழுத்த மாங்கனி பாண்டிச்சேரியில் உதிர்ந்து விட்டது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை என்று முழங்கிய வாய், தமிழ்வழிக் கல்விக்காக ஊர்வலத்தில் நடந்து வந்த கால்கள், எங்கும் தமிழ் என்றும் தமிழ் என முழங்கிய நெஞ்சம், வள்ளுவத்தைத் தொட்டுத் தமிழ்க்காதல் கொண்டு மனைவியின் உரிமை படைத்த கரங்கள், போகும் இடமெல்லாம் தமிழன்பால் புத்தகம் சுமந்த தோள்கள், ஆகிய அனைத்தும் தனக்குவமை இல்லாதான் தாளில் அமைதி அடைந்து விட்டன.

''எல்லோரும் தவம் செய்து பிள்ளைகளைப் பெறுவார்கள். நாங்கள் தவம் செய்து தந்தையாரைப் பெற்றோம்'' என்று அவருடைய மக்கள் கதறியழுகிறார்கள்.

''அண்மையில் தானே அதிக நேரம் உரையாடினேன். அவரா மறைந்து விட்டார்?'' என்று தமிழ்க் காதல் கொண்ட தமிழக முதல்வர் வருந்துகிறார்.

''இவரை வைத்த இடத்தில் இனி யாரை வைத்துப் பார்ப்பது?'' எனத் தமிழகப் பல்கலைக் கழகங்கள் வாடுகின்றன.

''தமிழுக்கு ஊன்றுகோலாக இருந்தவர் போய்விட்டாரே! தமிழ் வளர்ச்சிக்காகத் தன்னையே தந்து எதையும் துணிவோடு சொல்லும் இவருடைய மறைவினால் வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்து விட்டதே'' எனத் தமிழறிந்த பெருமக்கள் கண்ணீர் விடுகிறார்கள்.

தீயே! உனக்கொருநாள்
தீமூட்டிப் பாரோமா
சாவே! உனக்கொருநாள்
சாவுவந்து சேராதா

என்று கண்ணதாசன் மரபு கலங்கித் துடிக்கிறது.

சிலபேர் வாழ்வில்தான் புகழ் பெறுவார்கள் பணியாற்றச் சென்ற இடத்தில் இறந்துவிட்ட மாணிக்கனார் அவர்கள் சாவிலும் புகழ்பெற்றிருக்கிறார்.

தனித்தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பணிகளைத் தானே செய்து சரித்திரம் படைத்தவர் மாணிக்கனார்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ்ப் பணியியல் துறையை உண்டாக்கி வெளிநாட்டுத் தமிழரைத் தமிழின் பால்

ஆற்றுப் படுத்திஞர். பட்டச் சான்றுகளில் தமிழ் இடம்பெறச் செய்தார். கல்விக்குழு, பேரவை ஆகியவற்றின் நிகழ்ச்சிகளைத் தமிழில் வெளியிட்டார். சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க அடிகோலினர். பண்டித மணியின் நூற்களையும் பண்டித மணியைப் பற்றிய நூற்களையும் வெளியிட்டார். தொல்காப்பியத்தை ஆய்ந்து இன்றைய நிலைக்கேற்ப விரிவாகப் பதிப்பிக்கவும் உரையெழுதவும் வாழ்வின் இறுதிப் பகுதியைச் செலவிட்டார். ஆத்தி சூடி போலத் "தமிழ் சூடி" பாடினர். காரைக்குடித் தமிழ்ச் சங்கம் இந்தியப் பல் தமிழ்க் கழகம், தமிழகப் புலவர் குழு, ஆகிய வற்றை வளர்த்தார் மேலைச்சிவ புரி சன்மார்க்க சபையைக் காத்து தன் ஆசிரியருக்குக் கடனாற்றினர். சங்க இலக்கியங்களையும் கம்பராமாயணத்தையும் புதிய முறையில் விளக்கினர். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பணியாற்றியபோது கலைக்கழகம் அமைத்துப் பல மாணவர்களுக்குத் தமிழ் ஆர்வத்தை ஊட்டினர். ஆசிரியரான பண்டிதமணி கதிரேசன் செட்டியார் நினைவாகக் காரைக்குடியில் உள்ள தன் இல்லத்திற்குக் 'கதிர் அகம்' என்று பெயரிட்டார்.

இறக்கும் பொழுது தன் பிள்ளைகள் நினைவுவந்து அவர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் அது ஆண்டவனை அழைத்ததாக இருக்கட்டும் என்று தம் பிள்ளைகளுக்குத் தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி என்று தமிழ்ப் பெயர் சூட்டினர். அவருடைய மறைவை நினைத்தால்

சாவில் தமிழ்படித்துச்
சாக வேண்டும்-எந்தன்
சாம்பல் தமிழ்மணந்து
வேக வேண்டும்

என்ற கவிதை வரிகள் இவருக்காகவே பாடப்பட்டன என்று எண்ணத் தோன்றுகிறது.

நான் அவருக்குக் கடன் பட்டவன். நான் பேசும் பேச்சு அவர் போட்ட பிச்சை. தமிழ் படிக்காமல் வணிகவியல் படித்த என்னை யழைத்து 1959 முதல் 1962 முடிய ஏறத்தாழ மூன்றுண்டுகள் உணவு இடைவேளையின் போது தமிழ் சொல்லிக் கொடுத்தவர் டாக்டர் வ. சுப. மாணிக்கனர். போட்டிகள் வைத்துப் பரிசுகள் கொடுத்தார். கண்டித்துத் திருத்திஞர். கருணைக் கண் காட்டினர். தன்ட மிழைத் தரமுணர்ந்து தாய் போல ஊட்டிவிட்டார்.

அவருடைய மறைவு ஈடு கட்ட முடியாத பேரிழப்பு. மரணத்தைத் தவிர மருந்தில்லா நோய் எதுவுமில்லை என்று நாம் அறிவோம். இருந்தாலும் இந்த மரணம் தாங்க முடியாத துன்பமாகிவிட்டது.

தன்னை மறந்து தமிழ்வளர்த்த
தாளாளன்
மன்னுபுகழ் வ. சுப. மாணிக்கம்
—பொன்னனைய
உள்ளத்தால் பொய்யா துயர்ந்
தோன் புகழ்காட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு.

என்று அந்த மேதை இருந்த காரைக்குடியை நோக்கி அஞ்சலி செய்வோம். தமிழ் வழிக் கல்வியைக் கொண்டுவந்து அவர் ஆன்மா இறைவன் திருவடியில் சாந்தியடைய உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

கருத்தரங்கம்

தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் சித்திரைத் திருவிழாவையொட்டி 17-4-89 அன்று இரவு ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. திரு. சங்கரன் வரவேற்ருர். 'அருட்கவி பெற்ற அன்னை' எனும் தலைப்பில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் இலக்கியப் பேருரையாற்றினர். நகரத்தார் சார்பில் திரு. சோம நாராயணன் செட்டியார் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

நாநயாவின் கோடை விடுமுறைப் பயிற்சி முகாம்

10 ஆம் வகுப்பு, +2, மற்றும் பட்டப்படிப்பு முடித்த மாணவ மாணவியர் அடுத்து என்ன செய்ய வேண்டும்? மேற்படிப்பா, வேலையா, தொழிலா? அப்படியானால் என்ன படிப்பு என்ன வேலை, என்ன தொழில்?

மாணவ, மாணவிகள் தங்களைத் தாங்களே புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் அவர்களே முடிவு செய்து அதை அடையும் வழியைத் தெரிந்து கொண்டால் பெற்றோருக்குச் சிரமமில்லை. பொருத்தமற்ற ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து பின்பு உணர்ந்து துறைமாறி அதனால் விரையமாகும் நேரம், சக்தி, பணம் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். மேல் நாட்டு மாணவர்கள் பின்பற்றும் இந்த முறைக்கான பயிற்சி நூற்றுக் கணக்கில் செலவழித்தால் மட்டுமே இந்தியாவில் கிடைக்கும் இதனை ரூ. 50/- செலவில் நம் மாணவ, மாணவியர் பெற 'நாநயா' ஏற்பாடு செய்துள்ளது. பயிற்சி பெற்றவர்கள் தம் குறிக்கோளை அடைவதற்கும் 'நாநயா' உதவ இருக்கிறது. ஒரு முகாமில் 20 பேர் மட்டுமே பயிற்சி பெற இயலும் என்றும் இந்த வாய்ப்பு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும் என்றும் பயன் பெற விரும்புவோர் தங்களது பெயர், வயது, படிப்பு, கோவில், சொந்த ஊர் இப்போதைய முகவரி ஆகிய விவரங்களுடன் பொதுச் செயலாளர் நாநயா 5/484 நக்கீரர் தெரு, சதாசிவநகர் மதுரை-625 020 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் பொதுச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

கும்பகோணம் சங்கத்திற்குப் புதிய நிர்வாகிகள்

கும்பகோணம் நகரத்தார் சங்கத்தின் ஆண்டுவிழா 26-3-89 அன்று நடைபெற்றது சங்கத் தலைவர் திரு. வ. முத்து நடேசன் செட்டியார் வரவேற்றார். செயலாளர் திரு. எம். ஏ. சொக்கலிங்கம் அறிக்கை வாசித்தார். அப்போது 'நாநயா'வின் தலைவர் ஓ. எம். எஸ்பி எல். அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், திரு. பழ. செ. லெ. அருணாசலம் செட்டியார் திருமதி விசாலாட்சி ஆச்சி ஆகியோர் உரையாற்றினார்கள்.

பொருளாளர் திரு ஏ. ஆண்டியப்பன் நன்றி கூறினார்.

புதிய நிர்வாகிகள்

புதிய ஆண்டிற்கு திரு. பி. எஸ். ஆர் எம். முத்தையா தலைவராகவும் திரு. எம். எஸ். எஸ்பி. சுப்பையா திரு சிடி. சுப்பிரமணியம் திரு. ஏ நாச்சியப்பன் மூவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. எம். இராமசாமி செயலாளராகவும் திரு. பி. வி. ஆர் எம். குமரப்பன் பொருளாளராகவும் மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

இரங்கற் கூட்டம்

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் 30-4-89 ஞாயிறன்று அண்மையில் மறைந்த முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்களுக்கு முனைவர் தமிழண்ணல் அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL

நகரத்தார் குரல்

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ. 500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ. 300-00
முழுப் பக்கம்	ரூ. 150-00
அரைப் பக்கம்	ரூ. 75-00
கால் பக்கம்	ரூ. 40-00

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப் பெறும்

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணி விழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ. 50-00

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ. 24-00
டெபாசிட் சந்தா	ரூ. 200-00

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை M.O. மூலமும் பாங்க் டிராப்ட் மூலமும் அனுப்பலாம். அப்படி அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அல்லது எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :

"நகரத்தார் குரல்"
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை - 625 001